# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஜூலை 2000 ஜீவியம் 6 மலர் 3**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| மனித சுபாவம் | 2 |
| மழை | 12 |
| இம்மாதச் செய்தி | 19 |
| லைப் டிவைன் | 20 |
| சிறு குறிப்புகள் | 30 |
| ஆண்டு விழா | 32 |
| அஜெண்டா | 37 |
| சாவித்ரி | 39 |
| அன்பர் கடிதம் | 41 |
| பகவானுடைய இதர நூல்கள் | 44 |
| லைப் டிவைன் - கருத்து | 46 |
| நம்பிக்கை | 48 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 61 |


❊ ❊ ❊

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருட சந்தா ரூ.60/-**

# மனித சுபாவம் III

கர்மயோகி

**(Physical Skill) திறமையாக நீ அறிந்ததை, உணர்வாகப் பெறுதல் உயர்வு. உணர்வாக அறிந்ததை, அறிவாகப் பெறுதல் சிறப்பு. மனத்தாலும் அறிவாலும் சிறப்பாக நீ ஒன்றை அறிந்தால், அதை விவேகத்தின் சாரமாக அறிய முயலவேண்டும். உ-ம், ஒரு தொழில் 7 முறை தோல்வி அடைந்தால், அதன் பின் அதை மீண்டும் செய்யும்பொழுது விரக்தியின்றி செய்தால் அதன் சாரம் பொறுமை. ஒரு காரியத்தில் இதைப் பெற்றால், மெதுவாக இத்தன்மை எல்லாக் காரியங்களுக்கும் பரவி உன் நிலையை உயர்த்தும்.**

❋ ❋ ❋

தச்சு வேலை செய்வது, சிறிய சைக்கிள் ரிப்பேர் செய்வது, மேடையில் பேசுவது, தகராறு தீர்ப்பது போன்று நாம் பல திறமைகளைக் கற்கிறோம். அவற்றின் பயன் கருதி ஏற்றுக் கொள்கிறோம். சில சமயங்களில் இதுபோல் கற்ற திறமையொன்றில் ஆசைப்பட்டு அதிலேயே உயிரை வைத்திருப்பதும் உண்டு. அதுவே திறமையை உணர்வாகப் பெறுவது. நாம் செய்வது நம் அறிவுக்குட்பட்டதாக இருக்கும். அத்தொழிலுக்குரிய அறிவை அவ்விஷயத்தில் பெறுதல் மிக உயர்வு. அவ்வறிவு அத்தொழிலில் அனுபவப்பட்டவர் அறிவதாக இருக்கும். அதற்கு மேல் விவேகமான சூட்சுமம் உண்டு.

நாம் ஒரு புத்தகம் அச்சடித்திருப்போம். அதன் மூலம் அது சம்பந்தமான பேப்பர், அச்சு, இங்க் ஆகியவற்றிற்குரிய நுணுக்கங்களை அறிய முடியும். அடுத்தாற்போல் அச்சகத்திற்குப் போனாலும், அடுத்த புத்தகம் அச்சடிக்கப் போனாலும், புதிய பேப்பர், புதிய இங்க், புதிய எழுத்து வந்திருப்பதால், ‘இந்த அச்சில் எத்தனைப் பக்கம் உங்கள் புத்தகம் வரும் என்று அச்சுக் கோத்துப் பார்த்துத்தான் சொல்லமுடியும்’ என்றால் எழுத்தின் சைஸ் கண்ணில்பட்டு ஒரு பக்கத்திலுள்ள வார்த்தையைக் கொண்டு, இத்தனைப் பக்கம் வரும் என்று நாம் சொல்வதை, பிறகு அது சரியாக இருந்தால் மற்றவர் ஆச்சரியமாகப் பார்ப்பார்கள்.

நெடுநாள் தொழிலில் இருப்பவர், ஏதோ ஒரு சமயம் வரும் வாடிக்கைக்காரருக்குத் தமக்குரிய அனுபவம் இருப்பதைக் காண்பதுண்டு. தமக்கு மேலும் வாடிக்கைக்காரருக்கு விளங்குவதையும் காணலாம். செயல் (உடல்), உணர்வு, அறிவு, ஆன்மா என்ற நிலைகளில் காரியங்களிருப்பதால், நமக்கு ஆன்ம நிலைக்குரிய அறிவு இருப்பதால் இது சாத்தியம்.

விவசாய அனுபவமுமின்றி, விவசாயப் படிப்புமில்லாமல், பரம்பரை விவசாயிகள் செய்யும் வேலையை அவர்களைவிட நேர்த்தியாகச் செய்யும் கம்பனி ஊழியருண்டு.

அன்னையை ஏற்றுக் கொண்ட பின் எந்தத் தொழிலுக்குப் போனாலும் அங்கு நெடுநாளாக உள்ளவர் அறிவை நாம் உடனே பெறவும், அதைச் சற்று உயர்த்தவும் முடியும். இது அன்னை சக்திக்குண்டான திறன்.

ஓர் ஆங்கிலப் பேராசிரியர் ரயிலில் போகும்பொழுது எதிரேயிருப்பவர் தம் நண்பருக்கு அறிமுகமானவர், வெறும் பட்டதாரி, ஆபீஸில் வேலை செய்பவர் என அறிந்து இலக்கியத்தின் பெருமையை எடுத்துச் சொன்னார். கேட்டவருக்கு மேற்சொன்ன நுணுக்கம் தெரியுமாதலால் பேராசிரியர் சொல்லியதை ஏற்றுக் கொண்டு, மேற்கண்ட கருத்தையும் தெரிவித்தார். பேராசிரியரால் நம்ப முடியவில்லை, ‘நான் செய்யுள் poem ஒரு மணி நேரமாகப் படிக்கிறேன் விளங்கவில்லை. இந்த நுணுக்கத்திற்கு இது புரியுமா’ என்றார். கேட்டவர் செய்யுளைப் பார்த்து, தக்க விளக்கத்தைச் சொன்னார். இத்திறமைக்கு அந்த விவேகம் உண்டு.

**ஏதாவது மடத்தனமான ஒரு காரியம் எந்தத் திட்டத்தையாவது கெடுத்துள்ளதா எனக் கண்டு பிடி. அதை உடனே அறவே விலக்கு.**

❋ ❋ ❋

* டெக்னாலஜியில் உள்ள சிறு குறையைச் சரிசெய்து கொள்ளலாம் எனத் தொழிலை ஆரம்பித்தவர் 1½ கோடி நஷ்டப்பட்டார்.
* பெரிய தொழிலில் கிடைக்காத பங்கு கிடைத்ததை, அடிமுட்டாள் தனமாக 'எனக்கே தொழிலைப் பிறகு கொடுக்க வேண்டும்' எனக் கேட்டு இழந்தார்.
* திருடனைக் காவல்காரனாக வைத்துவிட்டுப் பணமெல்லாம் எங்கே போகிறது என்பவர் ஒருவர்.
* ஸ்தாபனத்தின் இலட்சியம் 'பணம் நம்மை நாடி வர வேண்டும்' என்றபொழுது அதில் முக்கியஸ்தர் பணம் வசூல் செய்யப்போய் அவமானப்பட்டார்.
* படிப்புக்காகக் கூலிக்காரனுக்குப் பெண் கொடுத்துவிட்டு குடும்பமே கூலிக்காரன் பண்பை அனுபவிக்க வேண்டியதாயிற்று.
* செல்லம் கொடுத்ததால் பிள்ளை ஒரு பரீட்சையை 19 முறையும், அடுத்ததை 17 முறையும் எழுதினான்.

இதுபோன்ற காரியங்கள் பெரிய குடும்பங்கள், ஸ்தாபனங்களில் தவறாது காணப்படும். அவற்றை விலக்க முயல்பவர்கள் குறைவு. நம் வாழ்வில் நிச்சயமாக இந்த அம்சம் இருக்க வாய்ப்புண்டு. கவனித்துப் பார்த்துப் பலனடைய வேண்டும்.

**அறிவில்லாத செயல் குழப்பத்தை விளைவிக்கும், ஆபத்தையும் ஏற்படுத்தும். அது உன் வாழ்விலிருக்கிறதா எனப் பார். இருந்தால் சுமார் 100 இடங்களில் அதன் சாயலிருக்கும். அதைக் காண வேண்டும்.**

❋ ❋ ❋



படித்தவர், படிக்காதவர் செயலைச் செய்யக்கூடாது. நகப் பாலீஷை வைக்க பாட்டிலில்லை என ஒரு பாட்டிலை எடுத்து நிரப்பினார் ஒருவர். கொஞ்ச நாள் கழித்து கண் வலிக்கு மருந்து தேடினார். ஒரு சொட்டு விட்டவுடன் விஷம் தலைக்கேறியது போலிருந்தது. டாக்டர் பார்த்து விட்டு கண் பிழைத்தால் ஆண்டவன் புண்ணியம் என்றார். நகப்பாலீஷ் பாட்டில் மூடி உடைந்துவிட்டதால் அதைக் கண் மருந்து பாட்டிலில் ஊற்றும் பொழுது நாளைக்கு இது ஆபத்து என்று படிக்காதவர் அறியமாட்டார்கள். ஊற்றினால் ஒரு சீட்டில் நகப்பாலீஷ் என எழுதி ஒட்ட வேண்டும். இந்த வீட்டில் இதுபோன்ற குறைகள் 100க்கு மேலிருக்கும். இவர்கள் பட்டதாரிகளானால் வாழ்வு தரம் 8வகுப்பு படித்தவர் நிலைக்கு மேல் உயராது. படிப்புப் பலன் தர அறிவும், தெளிவும் தேவை. தெளிவைப் பொருத்தே, படிப்புப் பலன் தரும். 5 கடிகாரங்கள் வேலை செய்யவில்லை. வாக்குவம் கிளீனர் ஒரு மறையில்லாமல் பயன்படவில்லை. இருக்கும் சாமானை மீண்டும் மீண்டும் வாங்கி முதலில் வாங்கிய பருப்பு பூச்சி அரித்து விட்டது. உள்ள துணிமணிகளைச் செவ்வனே உபயோகப்படுத்த முடியவில்லை என மைல் கணக்காக நீளும் பட்டியல் எழும். வீட்டில் 12,000 ரூபாய் செலவு 34,000 ரூபாயால் முடிவு பெறும். பலன் பாதியாக இருக்கும்.

தெளிவு, முறைமை, விழிப்பு, கவனம், அறிவு, பொறுமை, குடும்பம் நடத்தவும், கம்பனி நிர்வாகம் செய்யவும், மனிதனாக வாழவும், மாடு மேய்க்கவும் தேவை. அறிவற்ற செயலை எல்லா மட்டங்களிலுள்ளவர்களும் செய்கிறார்கள். தாங்கள் செய்வதை அறிவதில்லை. அதன் பலன் என்ன என்று சிந்திப்பதில்லை.

**மேல் உள்ளவர்களை எதிர்க்கும் மனப்பான்மையுண்டா? எவ்வளவு சிறு விஷயமானாலும், அதை அறவே நீக்க வேண்டும். எதிர்க்கும் எண்ணமும் உதவாது.**

❋ ❋ ❋

மேல் அதிகாரி சொல்லிய சிறு வேலைகளைச் செய்யாவிட்டால் தண்டிக்கமாட்டார்கள், கண்டிப்பார்கள். சில சமயங்களில் கண்டிப்பதும் இல்லை. சோம்பேறித்தனமாக இது போலிருப்பதுண்டு வேண்டு மென்றே செய்வதுண்டு **(desire to cross authority).** அந்தச் செயல் எவ்வளவு சிறு செயலானாலும் அது தவறு. நமக்குள்ள முன்னேற்றத்தை அது தடுக்கும். ஒரு மெஷினைப் பூட்டும்பொழுது ஒரு மறை குறைவாக விட்டுவிட்டால், மெஷின் ஓடும், ஆனால் அதன் திறமை 25% குறைந்துவிடும் என்பதை இன்ஜீனியர் அறிவார். $98.4^{0}$**F** இருக்க வேண்டிய டெம்பரேச்சர் 99.4 இருந்தால் உடல் வேலை செய்யும் திறன் அளவு கடந்து பாதிக்கப்படும் என்பதை டாக்டர் அறிவார். **Authority** அதிகாரம் என்று நமக்கு வேண்டாததன்று அதுவே உலகத்தின் சொத்து. ரோடில்லாவிட்டால் வாழ்க்கையில்லை, தபால் இல்லாவிட்டால் எதுவும் நடக்காது. இவற்றை நடத்துவது நாட்டின் நிர்வாகம். நிர்வாகம் அதிகாரத்தால் இயங்குகிறது. வீட்டிலும், வெளியிலும் நாம் அதிகாரத்திற்கு அறிவோடு பணிந்தால்தான் நாட்டில் அதிகாரம் இயங்கும். ஏதோ ஒருவன் அவன் அதிகாரியை எதிர்க்கிறான் என்பது வேறு. நமக்கு அதிகாரியை எதிர்க்கும் மனப்பான்மை வந்துவிட்டால், நாளைக்கு நாம் அந்த அதிகாரத்தைப் பெறமுடியாது. அதிகாரம் நிர்வாகத்திற்கு அவசியம். மனித வாழ்வுக்குக் காற்றும், நீரும் அவசியம் என்பதைப் போல் அவசியம்.

அதிகாரத்தையும் அதன் அவசியத்தையும் புரிந்து கொள்வது நம் சொந்த வாழ்வின் எதிர்காலத்தையும் அதன் வளர்ச்சியையும் புரிந்து கொள்வதாகும். எண்ணத்திலும் அதிகாரத்திற்கு எதிராக போகும் நிலை எழக்கூடாது.

**இரு விஷயங்களுக்குள்ள தொடர்பை நீ பார்க்கத் தவறியதுண்டா? இரு விஷயங்களுக்கிடையே இல்லாத தொடர்பை இருப்பதாக நீ நினைத்தது உண்டா? அப்படியானால் அது உன் வாழ்வில் நிரம்பியிருக்கும்.**



**அதற்கு மடமை எனப் பெயர்.**

❊ ❊ ❊

எதிர் வீட்டுக்காரர் வசதியாக இருக்கிறாரே எப்படி? என்று கேட்பவர், எதிர் வீட்டுக்காரர் உழைப்பாளி, தாம் சோம்பேறி என்பதைப் பார்க்க முடியாமல் கேட்டுக் கொண்டேயிருப்பார். உழைப்பு, வருமானத்தைப் பெருக்குகிறது என்பதைத் தெரியாமல் உழைப்புக்கும் வருமானத்திற்கும் உள்ள தொடர்பைப் பார்க்க முடியாதது மடமை.

நண்பன் முதல் மார்க் வாங்கினால், 'அவன் பணக்காரன் வாங்கலாம்' என்று பணத்திற்கும் படிப்பிற்கும் இல்லாத தொடர்பை மனதில் நினைத்துக் கொள்வது அறிவீனம். ஏதோ ஒரு விஷயத்தில் இது போன்று நினைத்தால் நம் வாழ்வில் எல்லா இடங்களிலும் இது இருக்கும். நம் பலஹீனங்களை மறைக்கவும், கடமைகளைச் செய்யாமலிருக்கவும் நாம் பயன்படுத்தும் பல்வேறு உபாயங்களில் இதுவும் ஒன்று.

விஸ்வேஸ்வரய்யா 104ஆம் வயதில் இறந்தார் என்ற செய்தியைக் கேட்டவர்கள் இவர் அத்தனை நாள் எப்படியிருந்தார் என்று வியப்பாகப் பேசிய பொழுது, சாப்பாட்டிற்கு இல்லாதவர் ஒருவர் 'அவர்களுக்கெல்லாம் சாப்பாட்டு வசதியிருக்கும்' என்று சொன்ன பொழுது அனைவரும் அவர் மனநிலையைக் கண்டு அதிர்ந்தனர். படித்த படிப்பின் பயன் என்னாவது என்றும் கருதாமல், மனிதனால் இதுபோல் நினைக்க முடிகிறது.

**அளவு கடந்த திறமையுடன் (resourceful) எப்பொழுதாவது நீ செயல்பட்டிருக்கிறாயா? அப்படி எனில் அத்திறமையை மற்ற விஷயங்களில் செயல்படுத்தினாயா? இல்லை எனில் இப்பொழுது செய்ய வேண்டும்.**

❊ ❊ ❊

எல்லோரும் அறிந்த விஷயங்களில் புத்திக் கூர்மையால் எதிர்பாராத பலன் பெறும்படிச் செய்வதற்குத் (**resourcefulness**) திறமை எனப் பெயர்.

சேல்ஸ் டாக்ஸ் 1937இல் வந்தது. 1952இல் ரேஷன் ஒழிந்தது போன்றவற்றை அரசியலில் புதுத் திறமை என்பதுண்டு. டாக்ஸியில் போகும்பொழுது தலை தெறிக்கும் வேகத்தில் போகாதே என டிரைவரிடம் காரில் உள்ள அனைவரும் சொன்னார்கள். டிரைவர் கேட்கவில்லை. போய் இறங்கிய இடத்தில் வந்த வேலையைப் பற்றிப் பேசாமல், டிரைவரைப்பற்றியே பேசினார்கள். மீண்டும் எப்படி அதே வண்டியில் போவது எனப் பயந்தனர். போன இடத்தில் அந்த வீட்டுக்காரர் உங்களோடு நான் திரும்ப வருகிறேன். டிரைவரிடம் சொல்கிறேன் என்றார். திரும்ப வரும் பொழுது டிரைவர் நிதானமாக வண்டியை ஓட்டினார். அனைவருக்கும் ஆச்சரியம். வீடு திரும்பிய பொழுது எப்படி நாங்கள் அனைவரும் சொல்லியதை டிரைவர் கேட்கவில்லை, நீங்கள் சொல்லியதை மட்டும் எப்படி கேட்டான் என்று விசாரித்தார்கள். நான் 'வண்டியை மெதுவாக ஓட்டு இல்லையென்றால் வாடகை தரமாட்டார்கள்' என்று சொன்னேன் என்றார். இதற்கு (**resourcefulness**) புதுத் திறமை எனப் பெயர்.

கிருஷ்ணதேவராயர் 17 யானைகளைப் பிரித்ததை இதுபோல் சொல்வார்கள். சந்தர்ப்பம் ஏற்பட்டால் சில சமயங்களில் இது போன்ற புது யோசனை தோன்றும். இந்த திறமையுள்ளவர்கள், இதை எல்லா விஷயங்களிலும், சந்தர்ப்பமில்லாதபொழுதும் பயன்படுத்த வேண்டும்.

**ஆழ்ந்த மன நிலைகளை அறிய முயல்வது நல்லது. பிறரிடம் அதுபோன்ற அறிகுறிகள் இருந்தால் அதை நாம் முழுமையாக ஏற்க வேண்டும். அவை சக்தி வாய்ந்தவை.**

❊ ❊ ❊

ஓரிடத்திற்குப் போய், வரும் பொழுது நம் பொருள் ஒன்றை அங்கு மறந்து வைத்துவிட்டு வந்தால், நமக்கு மீண்டும் அங்கு



வரப் பிரியம் உண்டு என்பார்கள். ஒரு புது உறவில் முதல் நிகழ்ச்சியே முடிவுவரை நிலைக்கும் என்பார்கள். **Subconscious** ஆழ்ந்த மனம் தவறு செய்வதே இல்லை. அதன் அபிப்பிராயத்தை அறிகுறிகளால் தவறாது காண்பிக்கும். நாம் அதைச் சகுனமாக எடுத்துக் கொள்கிறோம்.

ஸ்தாபனத் தலைவர் முக்கிய வேலைக்குப் படிப்பு அதிகமானவர் ஒருவர் தேவை என்று தேடிக் கொண்டிருந்தபொழுது திறமைசாலி ஒருவரைப்பற்றிக் கேள்விப்பட்டு அவரை அழைத்து வரச் சொன்னார். ஆர்வமாகக் கேட்டவர், ஆள் வந்தவுடன் பேசாமலிருந்தார். கொஞ்ச நேரம் கழித்து வந்தவர் ஒருவரை வந்திருப்பவர் யார் என்று விளக்கியவுடன் ஆர்வமாகப் பேசி, ஆர்டர் கொடுத்து விட்டார். இந்தத் தயக்கம் ஏன் என எவருக்கும் புரியவில்லை, இரண்டாண்டு கழித்து வந்தவரின் திறமை அபரிமிதமாக இருப்பதைக் கண்டு தலைவருக்குப் பொறாமை வந்து தொந்தரவு கொடுத்தார். அன்றுதான் வந்தவருக்கு முதல் நாள் தலைவரின் தயக்கம் புரிந்தது. பார்த்தவுடன் திறமைசாலி எனவே அன்றே அவருக்குப் பயம் கலந்த பொறாமை எழுந்ததை அவர் தயக்கம் காண்பித்தது.

***ஆழ்மன அபிப்பிராயங்கள் தவறாது வெளிப்படும். அவற்றைத் தவறாமல் கவனிப்பது பலன் தரும்.***

**நமக்கு ஒரு வேலை பூர்த்தியான பின், இதைச் சாதனை செய்வதற்குத் துணையாயிருந்த சமூக ஸ்தாபனங்கள் எவை என ஆராய்ந்து கண்டுபிடி.**

❊ ❊ ❊

ஒரு மனிதன் 21 வயது வரைக்கும் இந்தியாவில் சர்க்கார் அவனுக்காக 42,000/-ரூபாய் செலவு செய்கிறார்கள். கல்வி, மருத்துவ உதவி போன்றவற்றை மக்கள் நேரடியாகப் பெறுகிறார்கள். ரேடியோ, **T.V.**, ரோடு போன்ற சாதனங்கள், பாதுகாப்பு (போலீஸ்)

போன்றவற்றால் மறைமுகமாக நாம் உதவி பெறுகிறோம். வீடு எரிவதைத் தீயணைக்கும் படையினர் வந்து அணைத்தால், அது சர்க்கார் செய்யும் சேவை. நாம் அதற்குப் பணம் செலுத்துவதில்லை.

பட்டமளிப்பு விழா, மகாநாடு, கண்காட்சி, போன்றவை பெரிய நிகழ்ச்சிகள். மகன் வெளிநாடு போய்ப் பட்டம் பெற்று இன்று பெரிய உத்தியோகத்திலிருந்தால் இதை நாம் சாதிக்க நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவியவை எவை என்று யோசனை செய்தால் நாட்டிலுள்ள அனைத்தும் உதவியிருக்கும். தபாலாபீஸ், பஸ் முதல் அனைத்தும் நமக்குப் பயன்பட்டன. சிறு விஷயங்களை ஆராய்ந்தாலும் பேர் அறிவு வரும். எந்த அளவுக்கு நாம் சர்க்காருக்குக் கடமைப்பட்டுள்ளோம் என்று அறிந்து ஆராய்ச்சியைத் தொடர்ந்தால் சமூகத்திற்கு அதைவிட அதிகமாகக் கடமைப்பட்டது தெரியும். ஆராய்ச்சிக்கு முடிவில்லை, அடுத்த கட்டத்தில் ஆண்டவனுக்கு நாம் ஒவ்வொரு வினாடியும் கடமைப்பட்டது தெரியும், அந்த அறிவு நன்றியறிதலாகும்.

**புதிய நல்ல திறமைகளைப் பெற ஒரு முறையுண்டு. மனம் திறமையின் பகுதிகளை விவரமாக நன்கு அறிவது முதற்படி. அடுத்தது உணர்வின் பங்கு. கடைசியாக உடலும் அதே போல் அத்திறமையின் பகுதிகளை அறிய வேண்டும். உடலே திறமையைப் பூரணமாகக் கற்றுக் கொண்டால், மனம் தன் ஆதிக்கத்தை விட்டுக் கொடுக்கிறது. அடுத்தாற்போல் உணர்வும் விட்டுக் கொடுக்கும். இப்பொழுது உடலே அத்திறனை (மனம், உணர்வின் உதவியின்றி) பெற்றுள்ளது. இத்துடன் திறமை பூரணம் பெறுகிறது. இதற்கு மேல் திறமை வளர வேண்டுமானால், திறமையின் தரம் உயர வேண்டும். நம் *உள்ளத்தில்* அத்திறமை வேரூன்றி முதிர வேண்டும்.**

❊ ❊ ❊



இதுபோல் திறமையின் பகுதிகள் வளர்ந்தால், **(in precision, perfection, width, force, amplitude)** திறமை, தெளிவு, பூரணம், சக்தி, ஓட்டம், ஆகியவை உற்பத்தியாகும். நம்முள் நெடுநாள் இத்திறமை உறைவதால், நமக்குப் பொதுவான திறமையின் அஸ்திவாரமும், குறிப்பான திறமையும் **(talent)** உற்பத்தியாகும். உ-ம் வயலின் வாசிப்பது.

திறமை வளரும் வகை. வயலின் வாசிப்பதில் **(skill)** குறிப்பான திறமை - பொதுவாகச் சங்கீதத்தில் **(capacity)** திறமை - **(talent)** வயலின் வாசிப்பதில் சிறப்பான திறமை.

மனத்திலும், செயலிலும் உள்ள குறைகளையும், தீமைகளையும் ஏற்றுக் கொள்ளும் நேர்மையிருந்தால், முன்னேற்றம் அளவு கடந்து வரும். நாணயமின்மை, நம்பிக்கையின்மை, தீய எண்ணம், கெட்ட எண்ணம், பொய், துரோகம், பிறர் மனம் புண்படும் திறமையான மடமை ஆகியவை நம்முள் இருக்க வாய்ப்புண்டு. இதில் ஏதாவது நம்மிடம் இருக்க முடியும். இருப்பதை ஏற்பது நேர்மை. அதை மாற்ற முயல்வது சிறப்பு.

அவை வெளிப்படுவதில் சில முறைகள்.

1. பண ஆதாயமிருந்தால், எம் முறையும் ஏற்கக் கூடியது.
2. நல்லவர்கள், நமக்கு உதவி செய்தவர்கள் மீது கெட்ட எண்ணம் எழுவது.
3. வேலை செய்வது தவறு, பிடிக்காது.
4. கடத்தல்காரனானாலும் பணக்காரன் என்பதால் மரியாதைக்கு உரியவன்.
5. விசேஷங்களுக்குப் போகும் நல்ல பழக்கத்தையும் புறக்கணிக்கும் மனப்பான்மை.

❊ ❊ ❊

தொடரும்.

# மழை

கர்மயோகி

அன்னை மழையை அருள் என்கிறார். சூட்சுமத்தில் அருள் ஸ்தூலத்தில் மழையாகிறது. மழை பெய்ய வருண ஜபம் செய்வதுண்டு. அதை முறையாகச் செய்தால் தவறாமல் மழை பெய்யும். கற்புக்கரசிக்கு மனம் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்தக் கட்டுப்பாட்டை ஆசையின் விகாரங்கள் தொடா. ஆசை உணர்ச்சியாலானது. வாழ்வில் காற்று, வெளி, மழை ஆகியவை **(vital)** உணர்ச்சிக்குரியவை. ஆசையை அழித்த கற்புக்கரசிக்கு உலகில் உணர்ச்சிக்குரியவை கட்டுப்படும். எனவே அவள் பெய் என்றால் மழை பெய்யும். பக்தர்கள் மழை வேண்டுமென்றால் மழையை அழைத்தால் வரும் என்கிறார் அன்னை. தியானத்திலமர்ந்து, "மழை, மழை, மழை, மழை" என்றழைத்தால் மழை வரும் என்கிறார். தண்ணீர்ப் பஞ்சமுள்ள நாளில் வெளியில் போய் உள்ளே வந்த தம்பதி தண்ணீரில்லாததால், அன்னைக்குப் பிரார்த்தனை செய்தார்கள். ஒரு மணி நேரத்தில் பெருமழை பெய்தது. தேவையான தண்ணீரைப் பிடித்தனர் என ஒரு பெண்மணி எனக்கு எழுதியிருந்தார்.

அன்னை பக்தர் விவசாயியானால், அவர் நிலத்தில் உரிய காரியங்களைச் செய்தால் தண்ணீர் வேண்டும் என்ற நாளில் பிரார்த்தனையின்றி மழை பெய்யும். பிரார்த்தனையை மேற்கொண்டால் நிச்சயமாக மழை பெய்யும். நிற்க வேண்டும் என்ற அளவுக்கும் பெய்யும்.

தம் 15 ஏக்கர் நிலத்தில் ஒரு முறை நீர் பாய்ச்சி முடித்தவுடன் மழை பெய்வதை பக்தர் கண்டார். ஏன் நீர் பாய்ச்சிய பின் மழை பெய்கிறது? முன்னமே பெய்யக் கூடாதா என நினைத்தார். நிலம் வறண்ட பின் நிர்ப்பந்தத்தால் நீர் பாய்ச்சுகிறோம் என்று



நினைத்தார். தம் கடமையை வற்புறுத்தலால் முடிக்கிறோம். கடமை முடிந்தவுடன் மழை பெய்கிறது என்று புரிந்து கொண்டார். அடுத்த ஆண்டு மனதை மாற்றிக்கொண்டு ஜனவரியில் நிலம் வறண்டு போகுமுன் கால்வாய், பாத்தி போட்டு நீர் பாய்ச்ச ஆயத்தமானார். முதல் நாளே பெருமழை பெய்தது. பாய்ச்சும் நீரைவிட மழைநீர் வளமானது. நிலம் ஆழமாக ஈரமாகி அதிக நாள் ஈரம் காயாமலி ருக்கிறது என்பதால் இடைவெளி அதிகமாக விட்டு நீர் பாய்ச்சலாம். அடுத்த பாய்ச்சலுக்கு உரிய காலத்திற்கு முன் தயாரானார். மீண்டும் மழை பெய்தது. ஜனவரி முதல் ஜூன் வரை வெயிற்காலத்தில் 24 முறை தண்ணீர் பாய்ச்சுபவர் அந்த ஆண்டு ஒரே ஒருமுறைதான் தண்ணீர் பாய்ச்சினார்.

தண்ணீர் உணர்வைக் குறிக்கும். உணர்வு நெகிழ்ந்துள்ள இடத்தில் தண்ணீர்ப் பஞ்சமிருக்காது. வறண்ட ஊர்களில் மனம் வறட்சியாய் இருக்கும். மனம் உணர்ச்சியால் நனைந்தால், நிலம் மழையால் நனையும். தண்ணீர்ப் பஞ்சம் வரப்போகிறது என்ற பொழுது அன்பர்கள் கூடிப் பிரார்த்தனை செய்தனர். அந்த ஊரில் அதன்பின் தொடர்ந்து 4 வருஷம் நீர்ப்பஞ்சம் விலகியிருந்தது. பிறகு பக்தர்கள் நீர்ப் பிரச்சனையை மறந்தனர். மீண்டும் பஞ்சம் தலை தூக்கியது. நம்பிக்கையில்லாத பக்தருடன் அளவளாவினால் நீருக்குப் பஞ்சம் வருவதைக் காணலாம்.

1914 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் தேதி அன்னை முதன் முதலாகப் புதுவை வந்து தாம் தியானத்தில் கண்ட "கிருஷ்ணா" வைக் கண்டு கொஞ்ச காலம் தங்கியிருந்து பிரான்சுக்குத் திரும்பினார். மீண்டும் 1920 இல் யுத்தம் முடிந்தவுடன் நிரந்தரமாகப் புதுவைக்கு வந்து பகவானுடன் தங்கிவிட்டார்.

"நான் புதுவைக்கு வந்த வருஷத்தில்தான் அளவுகடந்த மழை பெய்தது. கடந்த 100 ஆண்டுகளில் பெய்யாத மழை அது என்றனர்" என்று அன்னை கூறுகிறார். அன்னையே அருள். அருளே மனித உருவமாக வந்ததால் தெரிவிக்க மழை வருகிறது.

அன்னைக்குச் சமர்ப்பணமாக விவசாயம் தொடங்கிய பக்தர் தாம் நிலம் வாங்கிய ஆண்டு அபரிமிதமான பெருமழை பெய்ததைக் கண்டார். 30 வருஷமாக அதுபோன்ற அளவு மழையை அவர் காணவில்லை என நினைத்துக் கொண்டிருந்தபோது, "இந்த நூற்றாண்டில் இதுவரை மூன்று முறை பெருமழை பெய்துள்ளது. அதில் 1960 ஆம் ஆண்டும் ஒன்று" என்று வானிலை அறிக்கையில் கண்டார்.

தண்ணீர் அபரிமிதமான சொந்த ஊரிலிருந்து தண்ணீரில்லாத ஊருக்குச் சர்க்கார் வேலையாகப் போனார். வீடு மாடியில். காலை 5 மணிக்குத் தண்ணீர் சிறிது நேரம் வரும். பிடித்து வைத்துக் கொள்ளவேண்டும். சில நாள் கழித்து மோட்டார் ரிப்பேர், கீழே போய்த் தண்ணீர் பிடித்து மேலே எடுத்து வரவேண்டும். வீட்டுக்காரர் மோட்டாரை ரிப்பேர் செய்யப் பிடிவாதம் செய்கிறார். அவர் பட்டபாடு குடியிருப்பவர்களும், நீர்ப் பஞ்சமான ஊரிலுள்ளவர்களும் அறிவார்கள். அவர் ஆசிரமம் வந்தபொழுது தம் வேதனைகளைச் சித்தரித்துவிட்டு, அன்னை இதற்கு வழி சொல்லியிருக்கிறாரா எனக் கேட்டு அறிந்ததுடன் கீழ்வருவன வற்றைச் சேகரம் செய்து கொண்டு போனார்.

* *நீரை விரயமாக்காமல் பயன்படுத்த வேண்டும்.*
* *மனம் நெகிழ்வாக இருக்க வேண்டும்.*
* *வீட்டுக்காரர் ரிப்பேர் செய்யாவிட்டாலும் அவர் மீது கோபம் கூடாது.*
* *தண்ணீர் விஷயத்தில் நம் கடமைகளைச் சரிவரத் தாமதமின்றிச் செய்ய வேண்டும்.*
* *முடியுமானால், மோட்டாரை ரிப்பேர் செய்யும்படி வீட்டுக்காரரைக் கேட்கக்கூடாது.*
* *எவர் மீது எரிச்சல் பட்டாலும், நம் வீட்டில் தண்ணீர் வாராது.*



இந்தக் கருத்துகள் அவருக்குப் பிடிக்கவில்லை என்றாலும் ஏற்றுக் கொண்டார்.

வீட்டுக்காரரைக் கேட்காமலிருப்பதை அவரால் ஏற்க முடியவில்லை. திரும்ப ஊர் போய்ச் சேர்வதற்குள் மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு கேட்பதில்லை என முடிவு செய்தார். வீட்டிற்குப் போனபொழுது, மோட்டார் ரிப்பேராகியிருந்தது. சற்று நேரம் தண்ணீர் அதிகம் வந்தது. பெரிய நிம்மதி. ஏற்கனவே மனம் அரைகுறையாக ஏற்ற கருத்துகளை இப்பொழுது முழுமையாக ஏற்றுக் கொண்டவுடன், பஞ்சமில்லை என்று சொல்லுமளவுக்குத் தண்ணீர் வந்தது. மனம் சந்தோஷப்பட்டு, பஞ்சம் நீங்கிய பின்னும் தம் மனதை ஆசிரமக் கருத்துகளால் நிரப்பினார். அடுத்த முறை ஆசிரமம் வர அவர் புறப்படும்பொழுது அந்த ஊரில் உள்ள ஒரே ஒரு வசதியான தண்ணீர்த் திட்டத்தோடு தம் வீட்டுப்பகுதியை இணைக்கப் போகிறார்கள் எனக் கேட்டுப் பரவசப்பட்டுவிட்டார்.

புதுவைக்கு அருகிலுள்ள கிராமம் ஒன்றிலிருந்து ஆட்கள் ஆசிரம டிபார்ட்மெண்ட் ஒன்றில் வேலை செய்கிறார்கள். அவர்கள் சரியாக வருவதில்லை. அவர்கட்கு ஆசிரமம் மீது கோபம், அன்னையைப் பிடிக்காது. நிற்காமல் வரச் சொன்னால், ஊரில் நீர்ப்பஞ்சமிருப்பதால் வர முடியவில்லை என்று கண்டு, அன்னையிடம் சொன்னார் தலைவர். அன்னை ஸ்ரீ அரவிந்தர் படத்தை எடுத்துக் கொண்டு ஊரை வலம் வரச் சொன்னார்கள். அடுத்த நாள் மழை அதிகமாகப் பெய்யத் தொடங்கிற்று. பல நாளாகியும் நிற்கவில்லை. மீண்டும் தலைவர் அன்னையிடம் மழை அதிகமாக இருப்பதாகச் சொன்னார். அன்னை புன்னகையுடன் கேட்டுக் கொண்டார். மழை நின்றுவிட்டது.

ஒரு வருடம் தொடங்கியபொழுது பஞ்சாங்கப் பலன்களைப் பார்த்த பக்தர் ஒருவர் அந்த ஆண்டு நாடே தண்ணீருக்குக் கஷ்டப்படும் என்று அறிந்து, தம் விவசாயத்தைக் காப்பாற்ற முனைந்தபொழுது, பஞ்சாங்கம் சொல்வதையே வானிலை

இலாக்காவும் சொல்லக் கேட்டுத் துணுக்குற்று, தினமும் 15 நிமிஷம் சீசன் முடியும்வரை 100 நாளைக்கு மழைக்காகப் பிரார்த்தனை செய்ய முடிவு செய்தார். பஞ்சாங்கமும், வானிலை இலாக்காவும் பொய்க்குமாறு அந்த ஆண்டு குறைவில்லாமல் மழை பெய்தது. அதிலிருந்து 10 வருடம் தொடர்ந்து மழை குறைவறப் பெய்தது. தொடர்ந்து அதுபோல் இருப்பது வழக்கத்திற்கு மாறானது. அவருடன் பிரார்த்தனையில் உட்கார்ந்தவர், 100 நாளில் பக்தர் பிரார்த்தனையை முடித்த பின்னும் பல நாள் பிரார்த்தித்தார். சீசன் முடிந்து 4 மாதம்வரை ஒவ்வொரு மாதமும் கணிசமான மழை பெய்தது. வானிலை இலாக்கா "இது வழக்கத்திற்கு மாறானது" என்றது. இந்த உபரி மழை 3 வருடம் தொடர்ந்தது.

காவிரி நீருக்காக கர்நாடகாவும், தமிழ்நாடும் ஏன் சண்டை போட வேண்டும் என வருந்திய பம்பாய் தமிழ் அன்பர் ஒருவர் காவிரி பொங்க வேண்டுமென்று ஒரு வருஷம் பிரார்த்தனை செய்தார். அந்த ஆண்டு காவிரி பொங்கிற்று. சட்டப்படி கர்நாடகா கொடுக்க வேண்டிய நீர் தமிழ்நாட்டில் உபரியாகி உபயோகப்படுத்த முடியாமல் இறுதியில் கடலில் கலந்தது.

தான் வளர்க்கும் பூந்தோட்டத்திற்கு மழை வேண்டுமென ஒரு குழந்தை அன்னையைக் கேட்டபொழுது, அதிக மழை என் தோட்டத்தை நாசமாக்கும், தொடர்ந்து சிறு மழை நெடு நேரம் வேண்டும் என மாலை 3 மணிக்குப் பிரார்த்தனை செய்ததில் அன்றிரவு இரவு முழுவதும் தூறலாக இருந்ததைக் கண்டு குழந்தை வியப்படைந்தது.

தம்மூரில் நீர்ப் பஞ்சம் என ஆசிரமம் வந்து, பிரார்த்தித்து விட்டு வீட்டுக்குப் போய் மூன்று நாள் பிரார்த்தனையை மேற்கொள்ள முடிவு செய்த பக்தர், பஸ்ஸை விட்டு வீட்டுக்குப் போன அரை மணிக்கெல்லாம் பெருமழை பெய்தது.



விவசாயத்திலிருந்த பக்தரான இளைஞருக்கு மழையில்லை எனில் பீதி வரும். ஆனால் பிரார்த்திக்கத் தோன்றாது. பலரும் நினைவுப்படுத்தப் பிரார்த்தனையை மேற்கொள்வார். மறுநாள் அல்லது அதற்கு அடுத்த நாள் மழை பெய்யும். அடுத்த முறை மழையில்லை எனில் அன்னை நினைவு வாராது. புலம்புவார். மற்றவர் பிரார்த்திக்கச் சொன்னால் செய்வார். ஓரிரு நாள் கழித்து மழை வரும். 8, 10 முறை பார்த்தபின் ஆச்சரியப்பட்டு பிரார்த்தனை தவறுவதேயில்லை என்றார்.

தண்ணீர்ப் பஞ்சமேயறியாத கல்கத்தாவிலிருந்து சென்னை வந்தவர் பஞ்சத்தில் துவண்டு போனார். பம்ப்பில் தண்ணீர் செந்நிறமாக வருவதைக் கண்டு அஞ்சினார். அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டு பிரார்த்தனையை மேற்கொள்ளப் பொறுமையின்றி அலறினார். தமக்கு உடனே வேறு வீடு கிடைத்ததையும், பஞ்சமேயில்லாமல் தண்ணீர் வந்ததையும் வியந்து எழுதி பிரசுரிக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

1952-54 இல் இராஜாஜி சென்னை முதலமைச்சராக இருந்தபொழுது தண்ணீர் வறண்டுவிட்டது. எல்லாக் கோயில்களிலும், மாதா கோயில், மசூதிகளில் பிரார்த்தனை செய்யும்படிக் கேட்டுக் கொண்டார். எதிர்க் கட்சிகள் ஏளனம் செய்தன. பெருமழை பெய்து பஞ்சம் நீங்கியது.

அமெரிக்காவில் மழையில்லை என பக்தர் பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனைக்கு அங்கு மழையில்லை. பிரார்த்தனை செய்யும்பொழுதெல்லாம் புதுவையில் மழை பெய்தது. சுமார் 3, 4 மாதம்வரை அவர் பிரார்த்தனைக்கு அமெரிக்காவில் மழை பெய்யவில்லை. பிறகு பெய்தது. தொடர்ந்து பெய்தது. அபரிமிதமாகவும் பெய்தது.

சென்னையில் அதிகமான பக்தர்களிருப்பதால், அவர்கள் மழைக்கான முயற்சியை முழுமையாக மேற்கொண்டால்,

சென்னையில் நீர்ப்பஞ்சம் விலகும். உள்ளம் நெகிழ்ந்தால் மழை பெய்யும். வறண்ட உணர்ச்சியுடையவருடைய தொடர்பு மழைக்கான பிரார்த்தனை பலிக்க இடையூறாக இருக்கும்.

இக்கட்டுரை அன்னைக்கு ஒரு மௌனமான பிரார்த்தனை. இதை எழுதிய அடுத்த 3 நாளில் புதுவையில் 12 அங்குல மழை, தமிழ்நாடு முழுவதும் பெருமழை. மதுரையில் 10 அங்குல மழை. தாம்பரம் 9 அங்குல மழையைப் பெற்றது. மழை, நீர் வேண்டும் எனப் பிரார்த்தனை செய்தால் பூரணமாகப் பலிக்கும்

நன்றி: அமுதசுரபி

12 ஆண்டுகட்குப்பின் இந்த ஆண்டு பருவ மழை தவறலாம் என்று வானிலை இலாக்கா கூறுகிறது. பக்தர்கள் தேசபக்தி மிஞ்சி நாடு மழை வளம் பெற பிரார்த்தனை செய்தால், பருவமழை தவறாது. பிரார்த்தனை பலிக்க உதவும் அம்சங்கள்;

1. தேசபக்தி நெஞ்சை உணர்வால் நிரப்பவேண்டும்.
2. நாட்டில் எங்கு நீர்ப்பஞ்சம் என்றாலும் நம்மூரில் வந்ததுபோல் மனம் துணுக்குற வேண்டும்.
3. நம் வீட்டில் கடுமையான நீர்ப்பஞ்சம் உள்ள நேரம் நாம் தண்ணீரைப் பயன்படுத்துவதுபோல் வெகு கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.
4. நீர்வளத்தையும் அன்னையையும் மனவளம் இணைத்து மகிழவேண்டும்.
5. பிரார்த்தனை நெஞ்சின் ஆழத்திலிருந்து எழவேண்டும்.

### ஜீவிய மணி

அகந்தை புலன்களால் செயல்படுகிறது.



# இம்மாதச் செய்தி

**எண்ணம் பவித்திரமாகப் பூரணம் பெற்றால் நினைத்தது நடக்கும். பொருள்கள் நாடிவரும், தேடியவர் நம்மைத் தேடி வருவார் என்கிறார்கள்.**

**அன்னை என்னைத் தேடி எப்பொழுதோ ஒரு சமயம் வருவதால், என் எண்ணம் பூரணம் பெறவில்லை என்று பொருளா? பவித்திரம் இல்லை என்றாகுமா?**

* * *

# லைப் டிவைன்

கர்மயோகி

## VIII. The Methods of Vedantic Knowledge

*Page No: 66*
*Para No: 11*

What we see is not true
It is apparent reality.
Fundamental Reality is behind.
We see the movement.
We see the formation.
Vedantic experience saw behind them.
Their analysis led them to a concept.
Sat is their last concept.
That was Brahman for them.
It is pure Existence.
They could not define it.
It was infinite.
It was absolute.
Our consciousness is ordinary.
Our experience is normal.
It does not warrant this conception.
Vedantic rishis went beyond them.
We live by senses.
Our mind is sense - mind.



## 8. வேதாந்த ஞானம்

நாம் காண்பது உண்மையன்று.
அது தோற்றம்.
சத்தியம் பின்னாலிருக்கிறது.
நாம் காண்பது அசைவு.
அது ரூபம்.
வேதாந்தம் அசைவையும், ரூபத்தையும் கடந்த பார்வையுடையது.
அவர்களுடைய ஆராய்ச்சி முடிவு பெற்றது.
அப்படி சத் என்பதைத் கண்டனர்.
அதைப் பிரம்மம் என்றனர்.
அது தூய்மையான சத்தாகும்.
விளங்கும்படிச் சொல்லக் கூடியதன்று சத் என்பது.
அது அனந்தம்.
பூரணமானது.
நம் ஜீவியம் எளியது.
நம் அனுபவம் அன்றாட வாழ்க்கைக்குரியது.
அதன் மூலம் பிரம்மத்தைக் காண முடியாது.
வேதாந்தம் நம் ஜீவியத்தைக் கடந்த பார்வையுடையது.
நம் வாழ்வு புலன்களாலானது.
நம் மனம் புலன்கட்குரியது.

Existence is pure.
It is absolute.
Senses do not know the existence.
Senses experience movement.
Form reveals to the senses.
Senses tell us about form and movement.
Forms exist.
They are not pure.
They are always mixed.
They are combined.
They are aggregated.
They are relative.
We can go within ourselves.
Precise form vanishes then.
But movement remains.
Change persists even inside.
Matter is in motion.
Motion is in Space.
Motion is in Time.
They seem to be the conditions of existence.
We may call this existence.
The ideas of existence are no reality.
They correspond to no discoverable reality.
There is the phenomenon of self-awareness.
We can go behind it.
There is something immovable.



சத் பிரம்மம் தூய்மையுள்ளது.
பூரணமானது.
புலன்கள் பிரம்மத்தை அறியா.
புலன்கள் அனுபவிப்பது சலனம்.
ரூபம் புலனுக்குப் புலப்படும்.
புலன் நமக்குச் சலனத்தையும் ரூபத்தையும் அறிவிக்கின்றது.
ரூபம் உண்மை.
அவை தூய்மையானவையில்லை.
கலப்படம் ரூபத்தின் தன்மை.
இணைந்திருப்பது ரூபத்தின் இயல்பு.
பல சேர்ந்த நிலை ரூபத்தின் சுய உருவம்.
ரூபம் வாழ்வுக்குரியது.
உள்ளே சென்று நாம் உணரவேண்டும்.
ரூபத்தின் சிறப்பு அங்கே மறைகிறது.
சலனம் நிலைத்து நிற்கிறது.
உள்ளே மாற்றம் உருவத்துடனிருக்கிறது.
ஜடம் அசைகிறது.
ஜடம் அசைய இடம் தேவை.
அசைவு காலத்திற்குரியது.
காலமும், இடமும் சிருஷ்டிக்கேயுரியவை எனத் தோன்றுகிறது.
இதையே சிருஷ்டி எனவும் கூறலாம்.
சிருஷ்டியைப் பற்றி அறிவது முடிவில்லை எனவும் தோன்றும்.
எந்த சத்தியமும் அதன் மூலம் வெளிப்படாது.
சில சமயங்களில் ஆத்மானுபவம் பெறுகிறோம்.
அதன் பின்னும் சில சமயங்களில் காண்கிறோம்.
அசைவற்றதை அங்குக் காண்கிறோம்.

It is immutable.
We get a glimpse of it.
It is vague.
We perceive it.
We imagine it to be beyond life and death.
We think it is beyond formation and action.
This is a door.
Sometimes it swings open.
Beyond is the splendour of truth.
It shuts at once.
The door, before shutting, allows a ray to pass.
The ray touches us.
It is a luminous imitation.
We may hold on to it.
It needs strength and faith.
That gives a new starting point.
It is another play of consciousness.
It is of Intuition.
It is different from sense-mind.

*Page No: 67*
*Para No: 12*

We must examine carefully.
We make a discovery.
Intuition is our first teacher.
The Unknown is behind.
It has brilliant messages.
Intuition brings these messages.



அது அழிவற்றதுமாகும்.
அதன் சாயல் தெரிகிறது.
தெளிவற்ற உருவம் அதனுடையது.
நமக்கு அது புலப்படுகிறது.
வாழ்வையும், மரணத்தையும் கடந்ததாக நாம் நினைக்கிறோம்.
செயலையும், ரூபத்தையும் கடந்ததாகத் தோன்றுகிறது.
அது பெரு வாயில்.
சட்டென அது திறப்பதுண்டு.
சத்தியத்தின் அற்புதம் கண்ணில் படுகிறது.
உடனே திறந்த கதவு மூடுகிறது.
மூடுமுன் மின்னல்போல் காட்சி தெரிகிறது.
ஒரிழை ஒளி நம்மைத் தீண்டுகிறது.
ஜோதிமயமான தோற்றம் அது.
நாம் அதைப் பிடித்துக் கொள்ளலாம்.
நம்பிக்கையும் பலமுமிருந்தால் முடியும்.
அது புதிய திருப்பம்.
அது ஜீவியத்தின் புதிய நிலை.
அது நேரடி ஞானம்.
இது புலனறிவைக் கடந்த நிலை.

நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.
புதியன புறப்படும்.
நேரடி ஞானம் கற்பிக்கப்படுகிறது.
திரை மறைவில் இதுவரை காணாததுள்ளது.
அது அற்புதமானது.
நேரடி ஞானம் அதை நமக்குணர்த்துகிறது.

It is the beginning of higher knowledge.
Reason comes later.
It examines the shining harvest.
Reason profits from Intuition.
Man's reason is lower reason.
It presents a contradiction.
It pursues man forever.
It is his normal experience.
There is something behind.
It is beyond.
Intuition gives us that idea.
Man formulates that formless perception.
It is more positive of God, Immortality.
Intuition impels man to do them.
God, Immortality, Heaven represent what is beyond.

Intuition is strong.
It is strong like Nature.
It springs from Nature.
The very soul of Nature gives birth to Intuition.
It is contradicted by experience.
Also reason denies it.
Intuition cares nothing for these denials.
Intuition knows what is.
It knows what it is.
It knows it because it is of it.



அதுவே ஆத்ம ஞானத்தின் ஆரம்பம்.
பகுத்தறிவு பின் தொடர்கிறது.
பகுத்தறிவு ஞானம் பெற்றதைப் பரிசீலனைசெய்கிறது.
நேரடி ஞானத்தால் பகுத்தறிவு பலன் பெறுகிறது.
மனித அறிவு தாழ்ந்தது.
அது முரணானது.
நம் வாழ்வை அது நிரப்புகிறது.
இதுவே நம் அன்றாட அனுபவம்.
அதைக் கடந்ததுண்டு.
அது கடந்த நிலை.
நேரடி ஞானத்தால் நாம் அதை அறிகிறோம்.
உருவமற்றதை மனிதன் உருவகப்படுத்துகிறான்.
அமர வாழ்வு கடவுள் என்பதாகும்.
அதைச் சாதிக்க நேரடி ஞானம் உந்துகிறது.
சொர்க்கம், கடவுள், அமர வாழ்வு என்பவை கடந்த நிலையைக் குறிக்கின்றன.

நேரடி ஞானம் வலுவானது.
இயற்கை போன்ற வலுவுடையது.
இயற்கையினின்று பிறந்தது.
நேரடி ஞானம் இயற்கையின் ஆழத்திலிருந்து பிறந்தது.
அனுபவம் அதற்கெதிரானது.
பகுத்தறிவு அதை மறுக்கிறது.
நேரடி ஞானம் மறுப்பைப் பொருட்படுத்துவதில்லை.
தான் யாரென நேரடி ஞானம் அறியும்.
சத்தியத்தையும் அது அறியும்.
சத்தியத்திருஷ்டியிலிருந்து பிறப்பதால், நேரடி ஞானம் அதை அறியும்.

It has come from that.
The denial is a becoming.
The contradiction is an appearance.
Intuition will not yield to these.
There is a point of light in us.
This is the advantage of Intuition.
It opened the door in our self-awareness.
Intuition proceeds from this point.
Therefore Intuition tells us of it.
It speaks of Existence.
Better still, it speaks of the Existent.
Ancient Vedanta seized this message.
This is from Intuition.
Vedanta formulated it in three great declarations.
"I am He", "Thou are That", "All this is Brahman, this Self is Brahman" are the three declarations.

Cond..

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தொந்தரவை விலக்க, பிரச்சினையைத் தீர்க்க, வாய்ப்பை எழுப்ப, ஜீவியம் செறிய, திருவுருமாற்றமடைய அன்னையை அழைப்பது பல்வேறு நிலைகளிலுள்ளன. ஒவ்வொன்றும் அடுத்ததிலிருந்து வேறுபட்டது. ஆனால் அனைத்தையும் அழைப்பு என்கிறோம்.



அதனினின்று வருவது இது.
மறுப்பு இயற்கைக்குரியது.
முரண்பாடு தோற்றம்.
நேரடி ஞானம் இவற்றை ஏற்பதில்லை.
நம்முள் பொறியான ஜோதியுண்டு.
இப்பொறியே நேரடி ஞானத்திற்கு ஆதரவு.
நம்மை அறிய உதவும் கதவு இப்பொறி.
நேரடி ஞானம் இங்கிருந்து புறப்படுகிறது.
ஞானம் நமக்கிதை உணர்த்துகிறது.
சத்தைப் பற்றி அது கூறுகிறது.
மேலும் சத் புருஷனைத் பற்றிக் கூறுகிறது.
வேதாந்தம் இதைப் பற்றிக் கொண்டது.
அதைக் கூறியது நேரடி ஞானம்.
மூன்று மந்திரங்களாக அதை வேதாந்தம் புனைந்தது.
"நானே அவன்", "நீயே அது", "சர்வம் பிரம்மம், ஆத்மா பிரம்மமாகும்", என்பவை அம்மந்திரங்கள். சோகம் அகம் பிரம்மம். சர்வம் பிரம்மம்.

தொடரும்...

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதனால் முடியாத இடத்தில் அன்னை ஆரம்பிக்கின்றார். மனிதன் அழைக்கும் நேரம் அன்னை செயல்படுகிறார். மனித முயற்சி அகந்தையின் வெளிப்பாடு. மனித முயற்சி அவசியம். ஆனால் அன்னையைப் புறம்பாக்கும் முயற்சி கூடாது.

அன்னையை அழைத்து அவருள்ளே வந்தபின் அன்னை செயல் நம்மில் பூர்த்தியாக முயற்சி தேவை.

"சிறு குறிப்புகள்''

# ஸ்ரீ அரவிந்தர் உறையுமிடம்

ஒரு சாதகியைப் பார்த்துப் பேசும்பொழுது, “நேற்றிரவு நான் சூட்சும உலகில் ஸ்ரீ அரவிந்தர் உறையுமிடத்திற்குப் போனபொழுது உன்னை அங்குக் கண்டேன். நீ மறந்துவிட்டாய்'' என்கிறார் அன்னை.

ஆசிரமம் ஆரம்பித்த நாட்களில் 15, 20 பேரிருந்தனர். புதியதாக வருபவர்கள் ‘‘ஆசிரமம்'' என்றால் ஆசனம், பிராணாயாமம், தியானம், பூஜை போன்றவற்றை எதிர்பார்ப்பார்கள். அவையெல்லாம் இங்கில்லை எனப் பதில் வரும். பிறகு என்ன இருக்கிறது? என்று கவனித்தால் மாலையில் கால்பந்து விளையாடப்போகிறார்கள். பகலில் எதுவும் செய்வதாகத் தெரியவில்லை. சமயத்தில் கேளிக்கை, கூச்சல் அதிகமாக இருப்பதுண்டு. ஆசிரமத்தில் என்னதான் செய்கிறீர்கள் என்ற கேள்வி முக்கியமாக எழும். ஸ்ரீ அரவிந்தர் எவரையும் எதையும் கண்டித்துச் சொல்வதில்லை என்பதால், எவரும் எதையும் செய்வதில்லை என்பது புதியதாக வந்தவர்கட்கு சில நாட்களில் தெரியும். முதன்மையான சிஷ்யரைக் கவனித்தவர் ஸ்ரீ அரவிந்தரிடம் போய் “முதன்மையானவர் யோகம் செய்வதில்லை என்று எல்லோரும் கூறுகிறார்களே” எனக் கேட்டார். “அவரே யோகம் செய்யவில்லை என்றால், பிறகு யார்தான் செய்கிறார்கள்?'' எனப் பதில் ஸ்ரீ அரவிந்தரிடமிருந்து கேள்வியாக வந்தது.

> **அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் ஏற்று அவர்களுடன் இருப்பதால் அவர்கள் செய்யும் யோகப் பலன் சிஷ்யர்களை அறியாமல் சிஷ்யர்கட்கு வந்து சேருகிறது என்று அன்னை கூறுகிறார்.**

1910இல் ஸ்ரீ அரவிந்தர் வந்தார். 1926இல் ஆசிரமம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பிறகுதான் அன்னை சட்டதிட்டங்களை



உருவாக்கி அமுல்படுத்தினார். அதுவரை முன் சொன்னபடிதான் இருந்தது. சாதகர்கள் நிலை அது. பக்தர்கள் நிலை என்ன?

1) பக்தர்கள் தங்கள் ஆன்ம விழிப்புக்கேற்ப பலன் பெறுகிறார்கள்.
2) Subconscious தன்னையறியாமல் பெறுவதை, பக்தர்கள் அறிவதில்லை.
3) பிரார்த்தனை பலிப்பது மட்டுமே பக்தர்கள் கண்ணில் படும்.
4) அன்னை தம் எல்லா ஆன்மச் சித்திகளையும் சாதகர்கட்கும், பக்தர்கட்கும் கொடுத்திருக்கிறார்கள்.
5) சில கனவில் தெரியும்.
6) அனைவரும் காண்பது சந்தோஷம். சந்தோஷம் என்பது முடிவான ஆன்மசித்தி.
7) ஆரோக்கியம், நீண்ட ஆயுள் கேட்காமல் பெறுவது.
8) மனம் விழித்து பிறவியிலுள்ள புத்திசாலித்தனம் வளர்கிறது.
9) முகம் பொலிவு பெறுகிறது.
10) சூட்சும உலகில் அன்னையுடன் பக்தர்கள் உறவாடுகிறார்கள்.

வாழ்க்கைப் பலன் மட்டுமே பக்தர்கள் கண்ணில் படும். ஆன்மிகப் பலன் சூட்சும லோகத்தைச் சேர்ந்தது என்பதால், அது பக்தர்கள், சாதகர்கள் கண்ணிலோ, மனதிலோ, நினைவிலோ படுவதில்லை.

* * *

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வாழ்வில் ஆனந்தம் பெற நல்லதும் கெட்டதும் தேவை. இரண்டும் சேர்ந்து ஒரு நிகழ்ச்சியை ஏற்படுத்தும். மனிதன் முழு ஆனந்தம் பெற அவன் இரு பக்கங்களையும் அனுபவிக்க வேண்டும்.

"அன்பர் உரை''

# ஆண்டு விழா

(சென்னை-மாம்பலம் தியான மைய ஆறாம் ஆண்டுத் துவக்க விழா 19.03.2000 அன்று செல்வி மகேஸ்வரி நிகழ்த்திய உரை)

ஓராண்டாகச் சாதித்ததைக் கொண்டாடவும், அதனடிப்படையில் அடுத்த ஆண்டு வேலைகளைத் திட்டமிடவும் ஆண்டுவிழா கொண்டாடுவது வழக்கம். இது சாதித்தவர்களுடைய சரித்திரம். எதையும் சாதிக்காதவருக்கு எல்லா வசதிகளும் உள்ள இடங்களுண்டு. அவர்கள் ஆண்டு நிறைவு, நிறைந்த ஆர்ப்பாட்டமாக இருக்கும். விஷயமிருக்காது. தோற்றமிருக்கும். எதையும் சாதிக்காமல், எந்த வசதியுமில்லாதவரும் ஆண்டின் நிறைவைக் கொண்டாடுவ துண்டு. அது சாங்கியமாக இருக்கும்.

**சாங்கியமான விழாவையும், ஆர்ப்பாட்டமான விழாவையும் அன்னை ஏற்பதில்லை.**

நாம் நம் வாழ்வில் என்ன சாதித்தோம், மையத்தில் எதை எட்டினோம் என்பது அனைவரும் அறிந்ததே. 41 வருஷமாக நான் ஸ்ரீ அரவிந்தம் என்றுணர்ந்ததை வாழ்வில் பொருத்தி, உலகத்தின் விவேகத்துடன் ஒப்பிட்டு, அன்பர்கள் அன்றாட வாழ்வில் பயன்படும் வகையில் 5000க்கு மேற்பட்ட சிந்தனைகளை எழுதி, அவற்றுள் முதல் 2000த்தைத் தமிழில் மொழிபெயர்த்து “யோக வாழ்க்கை” என வெளி யிட்டுள்ளேன். சமீபத்தில் அந்த நீண்ட கருத்துகளை தமிழ் மொழி யின் குறுகத்தரித்த குணத்தால் சிறப்புறும் வகையில் குறிப்பாக எழுத முயன்று 2000 சிந்தனைகளை மாற்றி எழுதியுள்ளேன். “இரத்தினச் சுருக்கம்” என்ற தலைப்பில் இதை வெளியிடலாம் என்பது எண்ணம்.

ஓர் அன்பர் தம் கடந்த ஓராண்டு அனுபவத்தை இப்புதிய கருத்துகள் மூலம் வெளியிட முயன்றால் சுமார் 10 அல்லது 20



கருத்துகளுக்குள் ஒருவர் அனுபவம் அடங்கும். அது அவருக்கு அந்த ஆண்டுக்கு வழிகாட்டியாக அமையும்.

63 வயதான பெண் 10 ஆண்டுக்கு முன் ஆஸ்பத்திரிக்குப் போனார். நுரையீரல் வேலை செய்யாததால் செயற்கை சுவாசம் அளித்தனர். இதயம் நிரந்தரக் கோளாறுக்குரியது. ஈரல் கெட்டுப் போய் நாளாகிறது. அநேகமாக எல்லாக் கோளாறுகளும் உள்ளன. டாக்டர்கள் “உங்கள் திருப்திக்காகக் கவனிக்கிறோம்” என்றனர். உடன்பிறந்தவர்கள் அனைவரும் அன்பர்கள், அனைவரும் பிரார்த்தித்தனர். நோயாளிக்கு அன்னை “தரிசனம்” தந்தார். உடனே 10 வயதில் அன்னையை, பால்கனியில் தரிசித்த நினைவு வந்தது. குணமாகி வீடு திரும்பினார். சமாதிக்கும் 200 மைல் பிரயாணம் செய்து வந்தார். “அன்று நான் பெற்ற தரிசனத்திற்கு உயிரிருக்கிறது” என்று நினைத்தார். இந்த 10 ஆண்டுகளாக 10 முறை **I.C.U.** வில் சேர்க்கப்பட்டு, பிழைத்துக்கொள்கிறார். ஆனால் அவர் குடும்பத்தாலோ, அவராலோ அன்னையை முழுவதும் ஏற்க முடியவில்லை. இந்த வாரம் ஆஸ்பத்திரியைவிட்டு வந்த பொழுதும் அனைவருக்கும் ஆச்சரியம். இதுபோன்ற அனுபவங்கள் ஏராளம்.

**அன்னை மறப்பதேயில்லை. மனிதனுக்கு நினைவே வருவதில்லை,**

என்ற சொல் இதுபோன்ற அனுபவங்கட்கும் பொருந்தும். நோயாளி முழுமையாக அன்னையை ஏற்றால், அடுத்த முறை ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியிருக்காது. அவர் செய்வாரா?

வாழ்க்கையிலுள்ள அனுபவம் அன்பர்களுடைய அனுபவத்திற்கு நேர் எதிரானது. அன்பர்களைத் தொடர்ந்து வரும் வாய்ப்புகளை விட்டு அவசரமாக விலகுவதை நாம் பலமுறை கண்டுள்ளோம். “அன்னை கொடுப்பதை எல்லாம் பெற்றுக்கொள்ள முடியவில்லை” என்பதைக் கேள்விப்படுகிறோம். **Man proposes, God disposes**. மனித விருப்பத்தைத் தெய்வம் ரத்து செய்கிறது என்ற வாழ்க்கைக்குரிய சொல் அன்னையிடம் தலைகீழே மாறி **Mother proposes, Man dis-**

**poses** அன்னை ஆரம்பிக்கின்றார், அன்பர் மறுக்கிறார் என்றாகிறது. எத்தனை உதாரணம் வேண்டுமானாலும் நாம் சொல்லலாம். 50,000ரூபாய் இலாபம் எதிர்பார்த்த திட்டத்தை 48 லட்சம் இலாபமானதாக மாற்றினார் அன்னை. முதலாளி செய்த ஆர்ப்பாட்டம் கொஞ்சமானதன்று. "எனக்கு அன்னையும் வேண்டாம், எதுவும் வேண்டாம்'' என எல்லாவற்றையும் அழித்துவிட்டு ஊரைவிட்டே போய்விட்டார் முதலாளி.

மலர்களை நாம் அறிவோம். பயன்படுத்துகிறோம். போற்றுகிறோம். அவற்றிற்கு ஜீவன் உண்டு.

**மலர்கட்குண்டான ஜீவன் மனிதனுக்குண்டா?**

என நாம் கேட்கமுடியுமா? மனிதன் ஜீவனோடு வாழ்ந்தால் அன்னைக்குப் பிரார்த்தனை செய்ய வேண்டுமா? அழைக்க வேண்டுமா? ஜீவனுள்ள நேரம் அன்னை தாமே செயல்படுவதை நாம் காண்பதில்லையா? அன்னையிடம் வந்து சில ஆண்டுகளான பின், பிரார்த்தனை தவறாது பலிப்பதைப் பார்க்கிறோம். பிரார்த்தனை பலித்த பொழுதெல்லாம் நாம் ஜீவனோடிருந்தது நினைவு வருகிறது. சுத்தத்தைப் பற்றியும், கணக்கு, பணம் ஆகியவற்றைப் பற்றி நாம் ஏராளமானவற்றைத் தெரிந்துகொண்டுள்ளோம். அவை முதலில் பலித்ததையும் கண்ணால் பார்த்திருக்கிறோம். எல்லாம் தெரிவதால் எல்லாம் நடக்கின்றனவா எனக் கேள்வி எழுகிறது. என்ன செய்யவேண்டும் என யாராவது கேட்டால்,

**புதியதாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை,**
**செய்வதற்கு ஏராளமாக இருக்கிறது,**

என்று சொல்லத் தோன்றுகிறது. எத்தனை அன்பர்கள் கூற நாம் கேட்கிறோம், "தெரியாதது இல்லை; செய்யத் தோன்றவில்லை" என்று.

**மனிதன் சாதிப்பதெப்படி?** ஆண்டு நிறைவை, நிறைவாகக் கொண்டாடும்படி எப்படி மனிதன் சாதிப்பான்? எதைச் சாதிப்பான்?



பலரும் வியக்கும்படிச் சாதித்தவரை எடுத்துக்கொள்வோம். 5 ஆண்டாக இந்த பக்தருக்கு நடக்காதது என்பதில்லை. இப்பொழுது அப்படி யில்லை. ஏன்? எனக் கேட்டால் "அன்று வீடு பிரச்சினை மயமாக இருந்தது. தீவிரமாகப் பிரார்த்தனை செய்தேன். இன்று பிரச்சினை கள் தீர்ந்துவிட்டன. அத்தீவிரம் இல்லை. அதனால் பலிப்பதில்லை'' என்று பதில் வருகிறது. கஷ்டம் வந்தால் அன்னை பலிக்கிறது எனில், கஷ்டமில்லாதபொழுது எப்படிப் பலிக்கும்? கஷ்டப்பட்ட உணர்ச்சி, பக்தியாக மாறினால் கஷ்டமில்லாதபொழுது அது பலிக்கும்.

**Physical - tragedy - accomplishment**
**Vital - misfortune - devotion**

உணர்வுக்கு கஷ்டம் வந்தால் மனிதன் அசைவான். உடலுக்கு விபத்து வந்தால் அசைவான். அப்பொழுது பிரார்த்தனை பலிக்கும். உணர்வு பக்தியாக மாறுவதுபோல் விபத்து உடலில் சாதனையாக மாறுகிறது. பக்தியிருந்தால் கஷ்டம் விலகும். சாதனையிருந்தால் விபத்து விலகும். உடலின் சாதனை என்ன? அதிக பெரிய வருமானமே உடலுக்கு சாதனையாகும். பொருளைச் சம்பாதித்தால் அது சாதனை. பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை என்பது குறள். பொருளே அன்பர்க்கு அருள் என்பதால் பொருளைச் சம்பாதித்தால் அருளுடன் அது வரும். அந்தச் சாதனையைக் கொண்டாடலாம்.

**பெரும்பொருள் ஈட்டுவது, பேரருள் பெறுவதாகும்.**

ஏன் பணம் தேடவேண்டும்? அது தவறன்றோ? பணத்தை எப்படியும் சம்பாதிப்பது சரியில்லை. அருளால், நல்ல வழியில் சம்பாதிப்பது அன்னைக்குச் செய்யும் சேவை, அதை அபரிமிதமாகச் செய்தால் ஆண்டுநிறைவை நிறைவாகக் கொண்டாடலாம்.

**அன்பர் இதைச் சாதிப்பதெப்படி?** ஒரு தவறு நடந்துவிட்டால் நாம் என்ன கேட்கிறோம்? "நீ படித்தவனாயிற்றே இதைச் செய்யலாமா?" "உங்கள் வயதிற்கு இந்தத் தவற்றைச் செய்வது சரியா?" அதுபோல் "நீங்கள் அன்பராயிற்றே, உங்களுக்கு இந்தப் பிரச்சினை வரலாமா?"

என்று கேள்வி எழாதவண்ணம் அன்பர் நடந்து கொண்டால், அவருக்கு அன்னையோடு ஜீவனுள்ள தொடர்பு இருக்கும், அன்னையோடு ஜீவனுள்ள தொடர்பிருந்தால் வருமானம் அபரிமிதமாகப் பெருகும். அதுவே குறைந்தபட்சம். அதிகபட்சம் எது? எந்தச் சந்தர்ப்பமும் சரியில்லாதபொழுது அன்பர் பெரிய காரியத்தைப் பெரிய அளவில் சாதித்தால் "இது அன்னை அன்பரால்தான் முடியும்" என்பார்கள். சட்டம் மாறி சலுகை வருவது, புதுச் சட்டம் ஏற்பட்டு வசதி வருவது அது போன்றதாகும்.

மனித வாழ்வில் பரவலாகக் காண்பது போட்டி மனப்பான்மை. மனிதனுக்குப் போட்டியிடுவது முக்கியம், அடுத்தவனை மிஞ்சுவது அவசியம் என்றால்,

**ஸ்ரீ அரவிந்தத்திற்குப் பிறருக்கு முதலில் அதிர்ஷ்டம் வருவது முக்கியம்.**

மனித மனநிலை மாறி, அடுத்தவருக்கு அதிர்ஷ்டம் முதலில் வரட்டும், எனக்கு அதற்கப்புறம் வரட்டும் என்று கூறும் மனப்பான்மை பெருந்தன்மையானது. பரந்தமனப்பான்மை மூலம் அன்னை தவறாது செயல்படுவார். இந்த மனமாற்றம் அதிர்ஷ்டம் வரப்பயன்படும்.

* ஆசையிருக்கு தாசில் பண்ண, அதிர்ஷ்டம் இருக்கு மாடு மேய்க்க என்ற பழமொழியை அன்னை மாற்றி "அதிர்ஷ்டமிருக்கு தாசில் பண்ண, ஆசையிருக்கு மாடு மேய்க்க" என்று பல சமயங்களில் காண்கிறார். அன்னையின் அதிர்ஷ்டம் தேடி வருவதையும், அதைவிட்டு அன்பர் வலிய விலகுவதையும் நாம் அன்றாடம் காண்கிறோம்.
* மனத்தால் விலகாவிட்டால் அன்னை விலகமாட்டார்.
* செயலால் விலகாவிட்டால், அதிர்ஷ்டம் நம்மை விட்டுப் போகாது.
* அதிர்ஷ்டத்தைச் சாதித்தால், பலர் வாழ்விலும் சாதித்தால் ஆண்டுநிறைவு கொண்டாட மனம் இசையும்.

❋ ❋ ❋



**Agenda**

**Vol III, P.49 It was the universal Mother who told Sri Aurobindo that India was free**

## இந்தியா சுதந்திரமடைந்துவிட்டது என பகவான் ஸ்ரீ அரவிந்தரிடம் லோகமாதா கூறினார்.

ஒரு பெரிய இடத்துப் பெண்ணைச் சாதாரண வரனுக்குக் கொடுப்பதானால் அவர்கள் அபிப்பிராயத்தை யார் மூலம் தெரிவித்தாலும் வரன் ஏற்றுக் கொள்வான். செய்தி பொதுவாக இரண்டாம் பேர்வழி மூலமாக வரும். சமயத்தில், டைப்பிஸ்ட், டிரைவர் மூலமாகக் கேள்விப்படுவார்கள். அன்னையின் அருள் மூலமாக அன்பர் பெறும் எந்தப் பெரிய காரியமும் அன்பர்க்குத் தெரிவிக்கப்படும் முறையே அருளுக்குரிய முறையாக இருக்கும்.

* பாங்க் கடன் தர அபிப்பிராயப்படும் செய்தி பாங்க் சேர்மன் மூலமாக வரும்.
* நாட்டின் தலைவர் அன்பரை நாடி வந்து வீட்டில் பார்ப்பார்.
* கவர்னர் பார்க்க விரும்பினால் கூப்பிட்டு அனுப்புவதற்குப் பதிலாக அன்பரை வீடுதேடி வந்து சந்திப்பார்.

ஸ்ரீ அரவிந்தர் உலகுக்குக் கொண்டுவந்த அருள் "**the greatest boon, from the Highest**" சிருஷ்டியின் உச்சகட்டத்திலுள்ள மிகப் பெரிய வரப்பிரசாதம்.

- இன்றைய வாழ்வின் எந்த நிலையும் அருளின் சிறப்பைப் பெற முடியாது என்ற காரணத்தால், அருள் சிறப்பாகப் பலிக்க வாழ்வின் எல்லையைக் கடக்கும்.
- அருள் பலிக்கும்பொழுது வாழ்வின் உச்சகட்டத்தில் பலிப்பதன் காரணம் அதுவே. (அருளின் சிறப்பு வாழ்வைக் கடக்கும். வெறும் அருள் உச்சத்தில் பலிக்கும். Super grace transcends present life. Grace reaches the top of life)

ஸ்ரீ அரவிந்தர் இந்தியச் சுதந்திரத்திற்காக யோகத்தை மேற்கொண்டபொழுது சுவாமி விவேகானந்தர் மூலம் ஆன்மீகச் சத்தியம் மோட்சமன்று, சத்தியஜீவியம் என அறிந்தார். உள்ளிருந்து எழுந்த குரல் “இந்தியச் சுதந்திரம் பூரணமாயிற்று. உனக்கு வேறு பணியுண்டு. புதுவைக்குப் போ” என்று கூறிற்று. இது அச்சில் வெளிவந்துள்ளது. வேறு வகையாக, பகவான் இந்தியச் சுதந்திரத்தைப்பற்றி அறிந்தாரா என அச்சில் வெளிவந்த செய்தி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

> **இந்தச் செய்தியை பகவானுக்குத் தெரிவித்த தெய்வம் லோகமாதா என்கிறார் அன்னை.**

பார்வதி, லட்சுமி, அம்மன் போன்ற தெய்வங்களை நாம் ஆதிபராசக்தி என்கிறோம். எது ஆதி, எது சக்தி, பராசக்தி என்றால் எது என்பவை தத்துவமான கருத்துகள். குழந்தையை நாம் “ராஜா” என்று பிரியமாக அழைப்பதைப்போல் நம் தெய்வத்தை நாம் முடிவானதாகக் கொள்கிறோம். பிரம்மம் சச்சிதானந்தமாகி, சத் மூன்று அம்சமாகப் பிரிவதில் பிரம்மம், புருஷன், ஈஸ்வரன் எழுகின்றன. ஞானத்திற்குரிய பிரம்மம், பக்திக்குரிய புருஷன், செயலுக்குரிய ஈஸ்வரன். ஈஸ்வரனுக் குரியவள் சக்தி. தெய்வங்கள் எல்லா நிலைகளுக்கும் உண்டு, என்பது போல் சக்தியும் எல்லா நிலைகளிலும் காணப்படும். முடிவான நிலையை சக்தி எனவும், அதனினும் உயர்ந்த நிலையை பராசக்தி எனவும், அதன் ஆதியை ஆதிபராசக்தி எனவும் தத்துவம் கூறுகிறது. அரசியல் தலைவரின் தகுதிக்கேற்ப அவரைக் கைது செய்யும் போலீஸ் அதிகாரியின் நிலையிருக்கும். அதிகாரியின் அந்தஸ்தைப் பொருத்து அழைப்பு கொண்டு வருபவரின் நிலை அமையும்.

> **ஸ்ரீ அரவிந்தரிடம் அவர் விழையும் செய்தியை லோகமாதாவே நேரிடையாகக் கூறுகிறார்.**

❋ ❋ ❋





## P. 4 Obeyed the unforeseeing instant's urge,

## எதிர்பாராத உந்தலை ஏற்கும் மனிதன்,

மனிதன் தன்னை அறியாதவன், தன் வாழ்வு ஆழத்திற்குரியது எனத் தெரியாதவன். தன்னையேயறியாதவன், தன் ஆழத்தை அறிய முடியாது. அவன் உந்தல்கள் அனைத்தும் உற்பத்தியாவது அவ்வாழ் மனதில், அவற்றை அவனால் மீறமுடியாது.

> **ஒரு திசையில் செல்லும் மனிதனை ஆழத்து உந்தல் அடுத்த திசைக்கு இழுக்கும்பொழுது தன்னை மீறி அதை மனிதன் ஏற்பது அவன் அன்றாட வாழ்வு நிலை.**

மனிதன் மனத்திற்குரியவன். மனம் இரு பகுதிகளாலானது. நாமறிவது மேல் மனம், நம் எண்ணங்களும், ஆர்வங்களும் அங்குள்ளன. அவற்றையே முடிவாக நாம் ஏற்கிறோம். கல்லூரி மாணவன் வாழ்க்கை அவன் வீட்டிற்குரியது. ஹாஸ்டலுக்குரியதன்று. ஹாஸ்டல் வாழ்வே முடிவானது என நினைக்கும் மாணவனைப் போன்றது மனித வாழ்வு. ஹாஸ்டலில் கட்டும் கோட்டைகளை வீட்டிலிருந்து வரும் ஒரு கடிதம் தகர்க்கும். வீடு நிலையானது, ஹாஸ்டல் தற்காலிகமானது. வீட்டிலிருந்து எழும் உத்தரவுகளை மாணவன் எதிர்பார்ப்பதில்லை, வந்தால் மறுக்கமுடியாதபடி ஏற்றுக்கொள்கிறான்.

மேல் மனத்தில் வாழும் மனிதன் ஆழ்மன உந்தல் எழுவதை எதிர்பார்ப்பதில்லை. வந்தால் தவிர்க்க முடியாதவை என ஏற்று அதன்படிச் செயல்படுகிறான். இது சம்பந்தமான கருத்துகளை, சாவித்திரி விவரிக்கிறது.

- *கண் மூடித்தனமான வாழ்வின் சுழல்கள்.*
- *விதியின் கதியைத் தாங்கும் மனிதன்.*

* தெரியும் வழிகளின் தெளிந்த அழகு.
* நீர்க் குமிழின் நித்தியானந்தம்.
* மனித வாழ்வுக்குப் புறம்பான புனிதம்.
* ஆழ்ந்துறையும் ஆன்மாவின் அமைதி.
* மனத்தைத் தட்டி எழுப்பும் அறை கூவல்.
* ஆசையின் மாயை அறிவிக்கும் வண்ணங்கள்.
* இதயத்தின் இனிமை உணர்வுக்குப் புறம்பு.
* தெய்வத்தின் வருத்தம் தேங்கிய இதயம்.
* நித்தியத்தை வெல்லும் அநித்தியம்.
* காலமென்னும் படுகுழியில் சிறு அசைவு.

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தன்னை அறியும் நிலையிலேயே ஜீவியம் பிறக்கிறது. தன்னையறிய வேண்டிய அவசிய மில்லாதபொழுதும் சத்தியம் உண்டு.



# "அன்பர் கடிதம்"

அன்னையின் பக்தை எழுதுவது. எனக்குக் கடிதம் எழுதவே தெரியாது. சரியாக எழுதுவேனோ இல்லையோ என்று இருந்தாலும் உங்கள் மகிமையைத் தெரியப்படுத்த வேண்டும் என்று ஆர்வத்துடன் எழுதுகிறேன்.

எங்கள் குடும்பத்தினர் 20 வருடங்களாகவே அன்னையை வணங்குகிறோம். நாங்கள் தினம் தினமும் அன்னை எங்களுடன் இருப்பதை உணர்கிறோம். இருந்தாலும் தற்பொழுது நடந்த நிகழ்ச்சியை எழுதுகின்றேன். என் கணவர் **Bhilai steel plant**இல் **Rail mill**இல் வேலை செய்கிறார். **October** மாதம் 6ஆம் தேதி காலை **first shift**இல் வேலை செய்ய 5.30 மணிக்குப் புறப்பட்டுப் போனார். அவரை வழி அனுப்பிவிட்டு வந்தவுடன் எனக்கு என்றைக்கும் இல்லாமல் அன்றைக்குத் தலை ஒரு பாரமாக இருந்தது. மனசிலே வேறு ஏதோ இனம் புரியாத பயமாக இருந்தது. மறுபடியும் படுத்துவிட்டேன். அன்னை பெயரை சொல்லிக் கொண்டே இருந்தேன். மணி 7.30 மணி ஆகியும் எழுந்திருக்கவோ, வேலை செய்யவோ முடியவில்லை. நான் அன்னையிடம் ஏன் இன்றைக்கு இப்படி உள்ளது ஏதோ **B.P.** அப்படின்னு சொல்றாங்களே அந்த மாதிரி ஏதேனும் ஆயிடுத்தா, தலையில் ஏதோ பாரம் அழுத்தற மாதிரி உள்ளது. வீட்டிலே வேறு யாரும் இல்லை. என் மைத்துனர் குடும்பத்துடன் பாண்டிச்சேரி ஆசிரமத்திற்குப் போய் உள்ளார்கள். கூட என் மகளும் போய் உள்ளாள். வீட்டிலே வயதான படுத்த படுக்கையாகிவிட்ட மாமியார், அவரைக் கவனித்துக் கொண்டு இருக்கும் மாமனார். இவர்களுக்கு நான் சமையல் பண்ணனுமே என்னைக் காப்பாற்றம்மா என்று பிரார்த்தனை செய்தேன். அதற்கப்புறம் கஷ்டப்பட்டு எழுந்திருந்து இட்லி பண்ணி மாமியார் அறையில் வைத்துவிட்டு என்னாலே எடுத்துக்கூட வைக்கமுடியவில்லை. நீங்களே சாப்பிட்டுக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு மறுபடியும் படுத்துவிட்டேன். திடீரென்று ஏன் இப்படி,

தலை பாரம் உள்ளது? மனசு வேறு அழனும் போல் உள்ளது. சோபாவில் படுத்துக்கொண்டு ஹாலில் இருக்கும் அன்னையின் படத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். மனசிலே அன்னையே என்னைக் காப்பாற்று, **"save me from all difficulties"** என்று பிரார்த்தித்துக்கொண்டு இருந்தேன். இதே நேரத்தில் காலிங்பெல் அடிக்கவே எழுந்து கதவைத் திறந்தேன். என்னுடைய உறவினர் மூலம் அவர்கள் வீட்டிற்குப் போன் வந்ததாகவும் அதாவது என் கணவர் வேலை செய்யும் இடத்தில் இருந்து அவருக்கு அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருப்பதாகச் செய்தி வந்தது. இச்செய்தி கேட்டவுடன் அன்னையே என்று கதறிவிட்டேன் எனக்கு அப்போ இருந்த மனநிலையை இப்பொழுது வார்த்தைகளால் எழுத முடியவில்லை. ஆஸ்பத்திரிக்குப் போக கால் அடி எடுத்து வைக்க முடியவில்லை. அன்னையே நீயே சரணம். காலையிலேருந்து எனக்கு ஏன் அப்படி இருந்தது என்று புரிந்துவிட்டது. தலை பாரம் எங்கேபோயிற்று என்று தெரியவில்லை. ஸ்கூட்டரில் போகும்போது மேலே ஆகாயத்தை பார்த்து **Mother** என்று சொல்லிக் கொண்டே இருந்தேன். வேறு எதுவும் சொல்லத் தோணவில்லை. என் மாமியார் வேறு வீட்டிலே அழுதுகொண்டு இருந்தார்கள். ஆஸ்பத்திரிக்குப் போய் நான் என் கணவரைப் பார்த்ததும் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. அதாவது பேசிக் கொண்டு இருந்தார். அவர் வேலை செய்யும்பொழுது **spindle** ஒன்றைத் தூக்கிக் கொண்டு இருந்தபொழுது சிக்னல் கொடுத்துக் கொண்டு பக்கத்தில் நின்று இருந்த என் கணவர் மீது அது உடைந்து சிதறி ஏதோ ஒரு வேகத்துடன் பட அங்கிருந்து அனைவரும் ஓடி இருக்கிறார்கள். இவர் அங்கேயே விழுந்துவிட்டார். உடனேயே ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் கொண்டுபோய் உள்ளார்கள். அடி வலப்பக்கம் வயிற்றில் பட்டுள்ளது. **S** வடிவத்தில் இருக்கும் ஊக்கு கழன்று இவர் வயிற்றில் பட்டுள்ளது. அங்கேயே ஊசி, மருந்து கொடுத்து **main** ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கே உடனே **X-ray** எடுத்து பார்த்து செக் பண்ணி மார்பு எலும்பு முறியவில்லை. உள்ளே ஒன்றும் ஆகவில்லை என்று கூறி ஏதாவது சாப்பிடச் சொன்னார்கள். வாந்திவருதா என்று செக் பண்ணி உள்



காயம் ஒன்றும் இல்லை என்று கூறி மேல் காயம் தான் அது சரியாகிவிடும் என்றும் 15 நாட்கள் **unfit** லீவ் கொடுத்து வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். என் கணவர் அடிபட்டு துடிக்கும் பொழுது, நான் இவ்வளவு பூஜை பண்ணும்பொழுது எனக்கு ஏன் அம்மா இந்தத் தண்டனை கொடுத்தார்கள் என்று கூறினாராம். அப்பொழுது அங்கே இருந்த **shift manager** ராய் என்பவர், அவரும் அன்னையின் பக்தர், நீ அன்னையை பூஜை செய்வதனால்தான் உன்னைக் காப்பாற்றியுள்ளார். இல்லையெனில் நீ இப்படிக் கத்தமாட்டாய். இந்நேரம் சத்தமே வராது நின்று போயிருக்கும் என்று கூறியுள்ளார். ஏற்கனவே ஜாதகத்தில் 48 வயதில் ஒரு பெரிய கண்டம் உள்ளதாகவும் பிழைப்பது அரிது என்றும் என் மாமியார் கூறியுள்ளார். நான் இந்த விஷயம்பற்றி அன்னையின் சமாதியில் கூறிவிட்டு நீங்கள் என்னுடன் இருக்கும்போது எனக்கு எந்த ஜாதகத்திலும் நம்பிக்கை இல்லை என்று கூறிவிட்டு வந்தேன். நான் தினமும் “சாவித்திரி” நூலை வணங்கி வந்தேன். அந்த அன்னைதான் இவரைக் காப்பாற்றி உள்ளார். அந்த அன்னையின் சக்தியைத்தவிர வேறு யாராலும் காப்பாற்றியிருக்க முடியாது. எனக்கு நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. அன்னை என்னுடன் எப்பொழுதும் இருக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டு இந்தக் கடிதத்தை முடிக்கின்றேன்.

❋ ❋ ❋

"பகவானுடைய இதர நூல்கள்''

## Archives Dec. 1981

### ஸ்ரீ அரவிந்தர் The Hindu, இந்து பத்திரிகையில் 1911 பிப்ரவரி 23ஆம் தேதி எழுதிய கடிதம் - அதன் பகுதிகள்

* நான் புதுவையில் தங்கியுள்ளபொழுது என் நல்ல பெயரைக் கெடுக்க எடுக்கும் முயற்சிகளினின்று என்னைப் பாதுகாக்க இக்கடிதம் எழுதுகிறேன்.
* கராச்சி, பஞ்சாபிலிருந்து என்னைப் பார்க்க வேண்டி வரும் "சிஷ்யர்"கள் - நான் பார்க்க மறுத்த பின்னும் - "என் பார்வை பட்டால் மோட்சம் கிடைக்கும் என நம்புபவர்கள்", தூர இருந்து தரிசித்துப் போகிறோம் என்பவர்கள், புதுவையில் வலம் வருகிறார்கள், ஜன்னல் வழியே எட்டிப் பார்க்கிறார்கள்.
* சுற்றியுள்ள போலீஸ் ஸ்டேஷன்களிலிருந்து அவர்கள் எனக்குக் கடிதம் எழுதுகின்றனர்.
* அதுபோல் என்னை நாடி வருபவர்கட்கெல்லாம் நான் கூறுவது, "என்னைப் பார்க்க முயல்வது பயன் தாராது".

அவர்கள் என்னுடன் பேசியதாகக் கூறுபவற்றை எவரும் நம்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

* நான் தனிமையில் வாழ்கிறேன்.

உள்ளூர் நண்பர்கள் சிலரும், நாட்டின் முக்கியஸ்தர்கள் சிலர் புதுவை வரும்பொழுதும் நான் சந்திக்கின்றேன். வேறு எவரையும் சந்திப்பதில்லை, சந்திக்க விரும்பவில்லை.

* தேசத்தொண்டு செய்தபொழுது எவரும் எனக்கு ஊதியம் அளிக்கவில்லை என்பதை மக்களுக்கு நான் கூறவேண்டியதில்லை.
* அரசியல் தொண்டு செய்ததற்கு எனக்கு எவரும் சன்மானம் தரவில்லை எனக் கூறத் தேவையில்லை. ''வந்தேமாதரம்'' பத்திரிகையில் ஆசிரியர்களில் ஒருவராக இருந்தபொழுது என் கட்டுரைகட்குச் சன்மானம் வந்தது தவிர நான் எவரிடமும் எதுவும் பெற்றதில்லை.



* சென்னையில் சில இளைஞர்கள் என்னுடைய சிஷ்யர்கள் என்ற பெயரில் நானிட்ட சேவைகளைச் செய்வதாகவும், என் புதுவை வாசத்திற்குப் பணம் வசூல் செய்வதாகவும் கேள்விப்படுகிறேன். அவை உண்மைக்குப் புறம்பானவை.
* பலர் திடீரென புதுவைக்கு வந்து என் இருப்பிடம் தேடி வருவதால் இக்கடிதம் எழுத நேரிட்டது.

- அரவிந்த கோஷ்

❊ ❊ ❊

**அடுத்த மாதத்தில் வரும் தரிசனநாள்**

ஆகஸ்ட் 15    பகவானின் ஜன்ம தினம்

**P.30 The perfect human soul must be able to move to Non-Existence without losing hold of Existence.**

தன் கட்சியை எடுத்துச் சொல்பவன் அரசியல்வாதி (politician). தான் ஒரு கட்சியைச் சேர்ந்தவனானாலும், நாட்டின் நன்மையைக் கருதுபவன் தேசபக்தியுள்ள அரசியல்வாதி (statesman).

மனிதன் குடும்பம் நடத்தலாம், அல்லது துறவறம் பூணலாம். ஒன்றை விட்டபிறகுதான் அடுத்ததை நாட முடியும் என்பது உலக அனுபவம். ஸ்ரீ அரவிந்தம் குடும்பஸ்தனுக்கு துறவியின் தூய்மையையும், துறவிக்கு இல்லறத்தின் பொறுப்பையும் வழங்குகிறது. குடும்பத்தை மட்டும் நடத்த முடியும் என்பதே இதுவரை உலகம் கண்ட உண்மை. துறவற நெறி பெரியது. குடும்பப்பொறுப்புகளை ஏற்றால் துறவறத்திற்குரிய சக்தியிருக்காது. மேலும் குடும்பம் ஆசை, பாசம், பற்றாலானது. பற்றறுத்த பின் ஆண்டவனைத் தேடுவது துறவறம். இது காணும் மனிதன் இரண்டில் ஒன்றை நாடினான். மனிதன் பூரணம் பெற,

* துறவறத்தின் தூய்மை தேவை,
* பாசமும், பற்றும் குறையானவை,
* அவை அன்பாக மாற வேண்டும்,
* அது எல்லா மனிதர்களாலும் இயலாது,
* அன்பும், தூய்மையும் நிறைந்த இல்லறம் பூரணமானது.
* குடும்பப்பொறுப்பை, உலகப் பொறுப்பாக மாற்றுவது துறவறம்.
* இடையறாது குடும்பத்தில் ஈடுபடுவதுபோல், உலகவாழ்வில் துறவி ஈடுபட வேண்டும்.
* குடும்பவாழ்வை மனதாலும், உணர்வாலும், உடலாலும் அனுபவிப்பதைப்போல் துறவி உலக வாழ்வை அனுபவிப்பதே பூரணம் தரும்.



* துறவறம் பெற, இல்லறம் விலக்கப்பட வேண்டியதில்லை.
* பூரணமான மனித வாழ்வு துறவறத்தின் தூய்மையையும், இல்லறத்தின் இன்பப்பொறுப்பையும் ஆன்மீக உயர்வுக்கு உயர்த்த வேண்டும் என்பது ஸ்ரீ அரவிந்தம்.

வக்கீல் தன் கட்சி ஜெயிக்கப் பேசுபவர். எதிர்க்கட்சி வக்கீல் அவர் கட்சி ஜெயிக்க சட்டம் பேசுபவர். ஒரு வக்கீல் கட்சிக்காரன் ஜெயிக்க வேண்டும் என்று மட்டும் நினைக்காமல் சட்டம் ஜெயிக்க வேண்டுமென நினைத்தால், மனதால் அவர் நீதிபதியின் நிலைக்கு உயருகிறார். ஸ்ரீ அரவிந்தர் கூறும் சட்டம், நியாயமாகும். வக்கீல் எதிர்க்கட்சியின் நியாயத்தை ஏற்கும் மனப்பான்மையுடையவராக இருப்பதின் அவசியத்தைக் கூறுகிறார்.

நியாயம் நிலைக்க சட்டத்தை விளக்கும் மனப்பான்மை வக்கீலை ஜட்ஜ் நிலைக்கு உயர்த்தும்பொழுது வக்கீல் உயர்ந்த மனிதனாவது போல், இல்லறத்தையும் துறவறத்தையும் இணைக்கும் மனித உள்ளம் தெய்வநிலையை எய்தும் என்று பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.

❊ ❊ ❊

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மனம் அன்னையை அறிவால் புரிந்துகொண்டு அழைப்பதால் நம் ஆர்வத்தில் குறை ஏற்படுகிறது.

# நம்பிக்கை

S. அன்னபூரணி

அந்தக் கிராமத்தில் வாராந்திர சந்தையில் வியாபாரம் களை கட்டித் திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. இங்கு அமைந்திருந்த கடைகளில் இருந்த விதம்விதமான விற்பனைப் பொருள்கள் எவரையும் கவர்ந்திழுக்கும்வண்ணம் இருந்தன.

“என்னங்க இந்த வேர்க்கடலை கூறு என்ன விலை?” ஆழ்ந்த யோசனையால் இருந்த கந்தன் தன்னை இப்படி மரியாதையுடன் அழைப்பவர் யார் என்ற ஆச்சரியத்துடன் தலை நிமிர்ந்தான். நாலைந்து இளம் பெண்கள் கல்லூரி மாணவிகள் என்பது அவர்கள் தோற்றத்தைப் பார்த்தாலே தெரிந்தது. கண்ணிலே போட்டிருந்த கறுப்புக் கண்ணாடி, ஆளுக்கு ஒரு பையைத் தோளில் மாட்டியிருந்த விதம், அவர்கள் நுனிநாக்கு ஆங்கிலம் யாவும் கந்தனை, பிரமிக்க வைத்தன. இந்தக் கிராமத்துச் சந்தைக்கு இப்படிப்பட்டவர்கள் வந்து அவன் பார்த்ததேயில்லை. “என்ன பெரியவரே, நாங்க கேட்டதுக்குப் பதில் சொல்லாமல் நீங்க பாட்டுக்கு ஏதோ யோசனை பண்ணிக்கிட்டிருக்கீங்க.”

சட்டென்று தன் நிலைக்குத் திரும்பிய கந்தன், “என்னம்மா சொன்னீங்க? கடலையா வேணும்? ஒரு கூறு நாலணா”.

அவன் பதிலைக் கேட்டதும் பெண்கள் ஒருவரையொருவர் அர்த்தபாவத்துடன் பார்த்துக் கொண்டனர். ஒருவேளை அதிக விலை சொல்லி விட்டோமோ என்று குழம்பிப் போனான். “மொத்தம் நாலு கூறு இருக்கு, அத்தனையும் கொடுங்க. இந்தாங்க ஒரு ரூபாய். ரொம்ப மலிவா இருக்கே”.

கந்தனுக்கு ஆச்சரியம் தாளவில்லை. ஒரு கூறு கடலையை விற்க அவன் படும் பாடு அவனுக்குத்தான் தெரியும். “கொஞ்சம் விலையைக்



கொறச்சுக்கோங்க. மூணு கூறு எட்டணாவுக்குக் கொடுங்க. இரண்டு கடலை கொசுறு போடுங்க. சொத்தை இருக்குமா?” என்று கடலையை வாங்குவதற்குள் என்னவோ பெரிய வீட்டையே விலைக்கு வாங்குற மாதிரி படுத்தும்பாடு “என்ன பிழைப்பு இது” என்று வெறுத்துப் போகும். இந்தக் குழந்தைகள் யார் பெத்த பிள்ளைங்களோ தெரியல்லை. இன்னிக்கு நான் யார் முகத்தில் முழிச்சேனோ தெரியல்லை! என்று மகிழ்வுடன் இருக்கிற கடலையை எல்லாம் கொட்டிக் கொடுத்துவிட்டு அவர்கள் கொடுத்த பணத்தைப் பெற்றுக் கொண்டான். “பெரியவரே எங்களுக்கு ஒரு உதவி செய்வீங்களா? நாங்க இங்கேயிருந்து ஸ்டேஷனுக்குப் போய் ரயிலைப் பிடிக்கணும். அதுக்கு வழி சொல்வீங்களா?”

“என்னம்மா இப்படிக் கேட்டுட்டிங்க? உங்க புண்ணியத்தில எங்க சரக்கெல்லாம் வித்துப் போச்சு. நானும் ரயிலைப் பிடிக்கத்தான் போயிட்டிருக்கேன்” என்று தான் கொண்டு வந்திருந்த கூடையில், தன் கையிலிருந்த பழைய துண்டை உதறிப் போட்டுக் கொண்டு கிளம்பினார்.

‘‘விமலா டிரெய்ன்ல மெட்ராசுக்குப் போய் அங்கிருந்து பாண்டிக்குப் பஸ் பிடித்துப் போகணும். நீ எல்லாக் காணிக்கையையும் எடுத்துக் கொண்டாயா?”

‘‘மறப்பேனா?’’ வேர்க்கடலையைக் கொறித்தபடி அவர்கள் கலகலவென்று பேசியபடி வந்தது கந்தனுக்கு மிகவும் வேடிக்கையாக இருந்தது. நடு நடுவே அவனைப் பார்த்து “**very tasty**” என்று சொல்லியபடி அவர்கள் வேர்க்கடலையைச் சுவைத்தனர்.

‘‘என்னடி இது பெரியவருக்கு ஆங்கிலம் தெரியாது. நீ பாட்டுக்கு ‘**tasty**’ என்று சொன்னால் எப்படி?’’ என்று ஒரு பெண் கோபித்துக்கொண்டாள்.

“இல்லீங்க அவங்க பார்வையிலிருந்தே அவங்க என்ன சொல்றாங்கன்னு எனக்குப் புரிஞ்சு போச்சு. கடலை ரொம்ப சுவையாயிருக்குன்னு சொல்றாங்க, சரியா?” என்றான் கந்தன் வெகுளித்தனமான புன்னகையுடன். ‘‘அட எப்படி கரெக்டா சொல்லிட்டீங்க?’’

"அம்மா, ஒருவரையொருவர் நல்லாப் புரிஞ்சுகிட்டா மொழியே தேவையில்லை. பார்வையிலேயே அவங்க என்ன சொல்றாங்கன்னு புரிஞ்சுக்கலாம்". "**He is quite an interesting personality**" என்று சொன்னாள் விமலா.

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லங்க. எனக்கு, சின்ன வயசிலி ருந்தே படிக்கணும்னு ஆசை. ஆனா குடும்ப நிலைமை அதுக்கு இடம் கொடுக்கலை. அதனால உங்களை மாதிரி படிச்சவங்களைப் பார்த்தாலே ஒரு சந்தோஷம். ஆனா ஒண்ணுங்க, உங்களை மாதிரி இருக்கிறவங்க யாரும் இதுவரைக்கும் என்னை மதிச்சுப் பேசினதேயில்லை. நீங்க தப்பா நினைக்கலேன்னா நான் உங்களை ஒண்ணு கேக்கலாமா?" "தாராளமாகக் கேளுங்களேன்".

''நீங்க எல்லாரும் பாண்டிச்சேரி போகணும்னு பேசிக்கிட்டீங்களே. அங்கே என்ன விசேஷம்? யாரைப் பார்க்கப் போறீங்க?" "எங்க அம்மாவைப் பார்க்கப் போகிறோம்".

"உங்க அம்மாவையா? அப்படின்னா நீங்க எல்லோரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைங்களா?" "ஆனால் முக ஜாடை வித்தியாசமா இருக்கே", வெகுளித்தனமான அந்தக் கேள்வி அந்தப் பெண்களுக்கு சிரிப்பை வரவழைத்தது.

"ஏங்க நான் ஏதாவது தவறாகக் கேட்டுவிட்டேனா?" "அதெல் லாம் ஒன்றுமில்லை. ஒரு விதத்தில் நீங்க சொன்னது சரிதான். நான் விளக்கமாகச் சொல்கிறேன். நாங்க அஞ்சு பேரும் காட்பாடியில் உள்ள பெண்கள் கல்லூரியில் படிக்கிறோம். என் பெயர் தாரிணி, இவள் விமலா, இவள் சுகுணா, இவள் அபர்ணா, இவள் பத்மா. நாங்கள் விடுமுறைக்கு, பக்கத்துக் கிராமத்திலுள்ள சுகுணாவின் வீட்டுக்கு வந்தோம். அப்பொழுதுதான் இந்தச் சந்தையைப் பற்றிக் கேள்விப் பட்டோம். நாங்கள் இங்கிருந்து ரயிலைப் பிடித்து சென்னைக்குச் சென்று அங்கிருந்து பாண்டியில் உள்ள அம்மாவைப் பார்க்கப் போகி றோம். நாங்கள் அம்மா என்று சொன்னது எங்களைப் பெற்றெடுத்த தாயை இல்லை. இந்த உலகத்திலுள்ள ஜீவராசிகளுக்கெல்லாம் தாய் அந்தத் தெய்வீக அன்னை."



"என்ன தெய்வத்தை நகமும் சதையுமாய் நேரிலேயே பார்க்க முடியுமா? உலகத்திலுள்ள எல்லோருக்கும் அவர் அம்மா என்றால் எனக்கும் அவர் அம்மாவா? என்னைப் போல, படிப்பறிவேயில்லாத ஏழையைக் கூடத் தன் மகனாக ஏற்றுக் கொள்வாங்களா அவங்க?"

கலகலவென்று சிரித்தாள் தாரிணி.'' என்ன இப்படிக் கேட்டுட்டீங்க பெரியவரே? எந்த அம்மாவாவது தன் குழந்தைக்கு படிப்பறிவு இல்லை, அழகு இல்லை, பணம் இல்லை என்ற காரணத்திற்காக ''இது என் குழந்தை இல்லை'' என்று சொல்வாங்களா? பார்க்கப் போனால் எந்தக் குழந்தையிடம் குறை அதிகம் இருக்கிறதோ அந்தக் குழந்தையின் மேல்தான் அந்த தாயின் கவனம் அதிகமாயிருக்கும்.

"நிஜமாகவா சொல்றீங்க? அப்ப நானும் அவங்க குழந்தையா? நான் சின்ன வயசிலேயே அம்மாவை இழந்திட்டேன். தாயன்பு என்றாலே என்ன என்று எனக்குத் தெரியாது. எனக்கும் ஒரு அம்மா கிடைப்பாங்க என்று சொல்லும்போது எனக்கு எவ்வளவு பரவசமாயிருக்கு தெரியுமா? குழந்தைங்களா உங்களை இன்னிக்கு நான் சந்தித்தது கூட தெய்வ சங்கல்பம்தான். நீங்கள் பேசினதிலி ருந்து எனக்கும் அந்த அம்மாவைப் பத்தித் தெரிஞ்சிக்கணும்னு ரொம்ப ஆசையா இருக்கு. அடடா, பேச்சு சுவாரஸ்யத்தில ஸ்டேஷன் வந்தது கூடத் தெரியல்லை". அவர்கள் ஸ்டேஷனில் நுழையவும் ரயில் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. கிடுகிடுவென்று அவர்கள் கொண்டு வந்த "லக்கேஜ்" எல்லாம் வண்டிக்குள் எடுத்து வைக்க உதவியவன் அவர்கள் முதலில் ஏற வழிவிட்டுக் கடைசியில் தானும் அதில் ஏறிக்கொண்டதும் வண்டி புறப்படத் தொடங்கவும் சரியாக இருந்தது. பெண்கள் அனைவரும் இருக்கையில் அமர்ந்தனர். கந்தன் அவர்கள் எல்லோரையும் பார்த்தபடி கூடையிலிருந்த துண்டை உதறிக் கீழே விரித்துவிட்டு அதன் மேல் அமர்ந்தான்.

"என்னங்க இது இங்கேதான் நிறைய இடம் இருக்கே. ஏன் நீங்க கீழே உட்கார்ந்திட்டீங்க? இங்கே வந்து உக்காருங்க" என்று தாரிணி தன் அருகிலே இருந்த இடத்தைக் காட்டினாள்.

‘‘அதெல்லாம் வேண்டாங்க. எனக்கு இப்படி ஒக்காந்து பழக்கமாயிடுச்சு. அதனாலே இதுதான் சௌகரியமா இருக்கு. நீங்க அம்மாவைப் பத்திப் பேசப் போறீங்க நான் கேட்கப் போகிறேன். உங்க எல்லோருடைய முகத்தையும் பார்க்க இந்த இடம்தான் வசதியா இருக்கும்.”

“சரி உங்க விருப்பப்படியே ஆகட்டும். அம்மாவைப் பற்றிப் பேசுவதென்றால் வருஷக்கணக்கில் பேசலாம். அதனால் நாங்க ஒன்று செய்கிறோம். நாங்க ஒவ்வொருவரும் எங்களுடைய அனுபவத்தில் ஆளுக்கு ஒன்றை எடுத்துச் சொல்கிறோம்.’’ ‘‘சரி’’ என்று உற்சாகத்துடன் தலையாட்டினான் கந்தன்.

தாரிணிதான் முதலில் ஆரம்பித்தாள். அம்மாவுக்குப் பூக்களைத் தட்டிலே வைத்து அடுக்குவோம். எங்கள் வீட்டில் நிறைய தட்டுகள் இருந்த போதிலும் எனக்கு அம்மாவுக்காக வெள்ளியில் ஒரு தட்டு வாங்க வேண்டும் என்று ஆசை. வீட்டில் மாறி மாறி ஏதோ செலவு வந்து கொண்டேயிருந்ததால் என் அப்பாவால் அதை வாங்கித் தர முடியவில்லை. வீட்டில் உறவினர் வந்து ஊருக்குப் போகும்பொழுது பரிசாகப் பணம் கொடுப்பது வழக்கம். அது தவிர “பாக்கெட் மணி” என்று ஒரு சிறிய தொகையை அப்பா கொடுப்பார். சிக்கனமாக செலவு செய்து அதில் ஒரு பகுதியைச் சேர்த்து வைத்து கடைக்குச் சென்று அம்மாவுக்கென்று வெள்ளியில் பூப்போட்ட ஒரு தட்டு வாங்கி வந்தேன். மனதுக்கு மிகவும் திருப்தியாக இருந்தது. அந்தத் தட்டை அம்மாவின் முன் வைத்து அம்மா உனக்குப் பெரிய தட்டு வாங்கலாம் எனக்கு சக்தி இல்லை. ஆகவே இந்தச் சிறிய காணிக்கையை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும், என்று பிரார்த்தித்து அதில் பூ வைக்க ஆரம்பித்தேன்.

ஒரு வாரம் கழித்து என் பிறந்த நாள் வந்தது. அன்று காலை எழுந்து அன்னையைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன்.

“மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் தாரிணி” என்று குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தால் என்னுடைய சித்தி நின்று கொண்டிருந்தார்.



“வாங்க சித்தி, எங்கே இவ்வளவு தூரம்?” “சித்தப்பா ஆபீஸ் விஷயமாக வந்தார் நானும் அவருடன் வந்தேன்”.

“சித்தி என் பிறந்த நாளன்று நீங்கள் வந்தது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. நமஸ்கரிக்கிறேன். ஆசீர்வதியுங்கள்” என்று நமஸ்காரம் செய்தேன். உடனே சித்தி என் கையில் ஒரு பரிசுப் பொட்டலத்தைக் கொடுத்தார்.

“என்ன சித்தி இது?”

“திறந்துதான் பாரேன்! என்றார் புன்சிரிப்புடன்.”

திறந்தவுடனேயே எனக்கு ஆச்சரியம் தாளவில்லை. ஒரு பெரிய வெள்ளித்தட்டு. அதற்குள் என் அம்மா இடைமறித்து “என்ன கோகிலா எதற்கு இவ்வளவு விலை உயர்ந்த பரிசெல்லாம்?” என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள். “அக்கா நீயும் உன் கணவரும் செலவாளிகள் மட்டுமல்ல, பரோபகாரியும் கூட. தாரிணிக்குப் பிறந்த நாள் பரிசாக எப்பொழுதும் புடவை எடுத்துத் தருவதுதான் வழக்கம். என்னமோ இந்தத் தடவை உருப்படியாக வெள்ளியில் ஏதாவது வாங்கித் தரலாமென்று தோன்றியது!” என்று சொல்லித் திரும்பிய சித்தி என்னைப் பார்த்து திடுக்கிட்டார். என் கண்ணிலிருந்து கரகரவென்று கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

“என்னம்மா தாரிணி ஏன் அழுகிறாய்?” அம்மாவும் சித்தியும் பயந்து போய் ஆளுக்கொரு கையைப் பிடித்துக் கொண்டு விட்டனர்.

“அழுகை இல்லை இது. ஆனந்தக் கண்ணீர். இந்தத் தட்டு எனக்கு நீங்கள் வாங்கிக் கொடுக்கவில்லை. அன்னைதான் வாங்கிக் கொடுத்திருக்கிறார். எப்படி என்று கேட்கிறீர்களா? ஒரு நிமிடம் இருங்கள் வருகிறேன்” என்று சொல்லி நான் வாங்கிய சிறிய வெள்ளித்தட்டை சித்தியிடம் காட்டி “இது அன்னைக்கென்று நான் ஆசையுடன் வாங்கிய தட்டு. இந்த “டிசைனை” பாருங்கள். **oval shape**-இல் சிறிய ரோஜாப்பூ போட்டது. நீங்கள் வாங்கிய தட்டு அது போலவே பத்து மடங்கு பெரிய அதே **oval shape** ரோஜா “டிசைன்” போட்ட தட்டு.”

அம்மாவும் சித்தியும் ஆச்சரியப்பட்டுப் போய்விட்டார்கள். "ஆமாம் நீ சொல்வது சரிதான் தாரிணி நல்லவேளை ஞாபகப்படுத்தினாய். நான் இது வரை அன்னைக்கு எடுத்து வைத்த காணிக்கை ஆயிரம் ரூபாய்வரை சேர்ந்துவிட்டது. அதை நீ பாண்டி போகும்போது அன்னையிடம் சேர்ப்பித்து விடுகிறாயா?'' என்று சொல்லிக் கொடுத்தார்."

தாரிணி சொல்லி முடித்தவுடன் கந்தன் கண்கள் பளபளக்க "ஆஹா அற்புதம்" என்று சொல்லி "அடுத்து நீ சொல்லம்மா" என்று விமலாவை நோக்கிக் கூறினான். இதற்கு நடுவில் ரயிலில் காபி காபி என்று விற்பனை செய்து கொண்டு வந்தான். ஒரு ரயில்வே சிப்பந்தி.

"பெரியவரே காப்பி சாப்பிடுகிறீர்களா?'' என்று கேட்டாள் அபர்ணா. கந்தன் அவசர, அவசரமாக மறுத்து! "அம்மா நான் சொல்கிறேனே என்று தவறாக எடுத்துக்காதீங்க. இன்னும் கொஞ்ச நேரத்திலே நான் இறங்கும் ஸ்டேஷன் வந்துவிடும்; நான் இறங்கிப் போயிடுவேன். அப்புறம் உங்களையெல்லாம் நான் பார்க்க முடியுமோ முடியாதோ? எனக்கு நீங்கள் சொல்லச் சொல்ல பாண்டி அம்மாவைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆவல் அதிகமாகிக்கிட்டே வருது. இருக்கிற கொஞ்ச நேரத்தை காப்பி குடித்து வீணாக்க வேண்டாம்".

விமலா உடனே, ''உங்களுடைய ஆர்வம் எங்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கிறது. கவலைப்படாதீர்கள். உங்கள் ஸ்டேஷன் வந்து நீங்கள் இறங்குவதற்குள் சுருக்கமாக ஆளுக்கு ஒரு அனுபவம் அம்மாவைப்பற்றிச் சொல்லி விடுகிறோம்".

''ஒரு நாள் என் அம்மா படுக்கையிலிருந்து காலை எழுந்திருக்கும்போது பார்த்தால் கழுத்தில் அணிந்திருந்த ஐந்து பவுன் தாலிக்கொடியைக் காணவில்லை. உடனே பதட்டப்படாமல் எழுந்து சென்று அன்னைக்குக் காணிக்கை வைத்து வேண்டிக் கொண்டார். அன்று என் அப்பாவுக்கு காலை "**shift**" அதனால் அவர் ஐந்து



மணிக்கே கிளம்பிப் போய்விட்டார். மாலை நாலு மணிக்கு அவர் அலுவலகத்திலிருந்து திரும்பியதும், ''விமலா காலையில் நான் அலுவலகம் கிளம்பும்போது பல் தேய்க்க **wash basin** அருகே சென்றேன். அப்போது தரையில் ஏதோ பளபளவென்று தெரிந்தது. குனிந்து பார்த்தால் உன் அம்மாவின் தாலிக்கொடி துண்டாகிக் கீழே விழுந்திருந்தது. அதிலிருந்த குண்டுகள் சிதறியிருந்தன. எல்லாவற்றையும் ஒன்றாகத் திரட்டி ஒரு டப்பாவில் போட்டு அன்னை படத்தருகே வைத்தேன். கவலைப்பட்டுத் தேடினீர்களா? அலுவலகம் கிளம்பத் தாமதமாகி விட்டதால் தூங்கிக் கொண்டிருந்த உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று நினைத்து **automatic latch** ஐப் போட்டுவிட்டுக் கிளம்பிவிட்டேன். அலுவலகத்தில் வேலைப்பளு அதிமிருந்ததால் இது பற்றி வீட்டுக்குப் போன் பண்ணி சொல்ல மறந்து விட்டது. அம்மா மிகவும் கவலைப்பட்டாளா?" "இது பற்றி எனக்கு ஒன்றுமே சொல்லவேயில்லையே அம்மா,'' ''நான் அன்னையிடம் மட்டும் சொல்லி விட்டேன். வேறு யாரிடம் சொல்ல வேண்டும்?'' ''என்ன ஒரு நம்பிக்கை உனக்கு?'' என்று என் அம்மாவைப் பாராட்டினேன்.

"விமலா என்னைப் பாராட்டுவது இருக்கட்டும், எனக்கு ஒரு உதவி செய். முதலில் தாலிக்கொடி கிடைத்ததற்கு நன்றி தெரிவித்து ஆசிரமத்திற்கு ஒரு தந்தி கொடுத்து விட்டு வா. கூடவே உன் அப்பாவின் பிறந்த நாளுக்குக் காணிக்கையாக ஐந்நூறு ரூபாய்க்கு ஒரு **draft** எடுத்து வைத்திருக்கிறேன். அதையும் அனுப்பி விடு என்றாள்".

கந்தனுக்குப் புல்லரித்தது. ''விமலா அம்மாவுக்குத்தான் எத்தனை நம்பிக்கை? பத்மா உன்னுடைய அநுபவத்தை சொல்லம்மா" என்றான் இன்னும் தீவிர ஆர்வத்துடன்.

"சுருக்கமாகச் சொல்கிறேன். எங்கள் வீட்டில் விதம்விதமான மலர்களைச் சேகரித்து வைப்போம். அடிக்கடி **Mother symbol** எல்லாம் அலங்கரிப்போம். அதனால் மறுநாள் பூக்கள் சேர்ந்துவிடும். நாங்கள் வசிக்கும் அடுக்கு மாடியில் தினமும் ஒரு கிழவி வந்து

அதையெல்லாம் சேகரித்துக் கொண்டு போவாள். ஒரு நாள் மலர்களை அள்ளும்போது “இவங்க வீட்டிலே வேற வேலையே இல்லை. பூவுக்கே ஏராளமா பணம் செலவழிப்பாங்க போலிருக்கு. எனக்குத்தான் அதிக வேலை” என்று முணுமுணுத்துக் கொண்டே போனது என் மனதுக்கு வேதனையளித்தது. மனம் நொந்து போய் நான் அன்னையிடம் முறையிட்டேன். அம்மா நாங்கள் இருப்பதோ அடுக்குமாடிக் கட்டிடத்தில், அதுவும் மூன்றாவது மாடியில் வாடிய மலர்களை எங்குக் கொண்டு சேர்ப்பது என்று புரியவில்லை. நீதான் வழி சொல்ல வேண்டும். “என்ன ஆச்சரியம்! அடுத்த சில நாட்களில் அந்த ஆயா வந்து “பாப்பா இந்த பூஜை பண்ணிய பூக்களை ஏன் குப்பையுடன் சேர்க்க வேண்டும்? நான் நம் “ப்ளாட்டுக்கு பின்புறம் ஒரு மூலையில் சிறிய குழி ஒன்று தோண்டி வைத்திருக்கிறேன். தினமும் மலர்களை அதில் கொட்டிவிடலாம். அது நாளடைவில் நல்ல உரமாகும். இனிமேல் தினமும் நான் எனக்குக் கிடைத்த மலர்களைக் கொண்டு வந்து தருகிறேன். ஆனால் அதற்கு நீ பணம் கொடுக்க வேண்டும்,” என்றாள். கரும்பு தின்னக் கூலியா? அன்னையிடம் முறையிட்ட சில நாட்களில் இப்படி ஒரு சாதகமான மாற்றமா?” என்று வியந்து போனேன்.”

“நீங்கள் சொல்லச் சொல்ல அந்த அம்மாவின் பெருமையை என்னால் சிறிது சிறிதாக உணர முடிகிறது,” என்றான் கந்தன் மன நிறைவோடு. “இருங்க பெரியவரே அடுத்தது என்னை நீங்கள் கேட்கு முன்பு நானே சொல்லி விடுகிறேன்” என்று அபர்ணா ஆரம்பித்தாள். ஸ்டேஷன் நெருங்க நெருங்க எங்கே எதையாவது கேட்காமல் விட்டுவிடுவோமோ என்று கந்தன் பதட்டப்படுவது அவளுக்கு நன்றாகப் புரிந்தது.

“ஒரு முறை டி.வி.யில் ஒரு போட்டி வைத்தார்கள். அதில் அவர்கள் கேட்கும் கேள்விக்கு டெலிபோனில் பதில் சொல்ல வேண்டும். யார் முதலில் சரியான பதில் சொல்கிறார்களோ அவர்களுக்குப் பரிசு கிடைக்கும். ஒரு முறை அது மாதிரி நான் சரியான விடையை சொன்னேன். ஆனால் முதலில் சொன்னது வேறு யாரோ ஒருவர்



என்பதால் எனக்குப் பரிசு கிடைக்கவில்லை. அன்று மாலை டி.வி. எதிரே அமர்ந்து நாங்கள் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது ஆறுதல் பரிசு கிடைத்தவர்களின் பெயர் வெளியிடப்படும் என்று அறிவித்தார்கள். உடனே என் தந்தை என் தாயிடம் கேலியாக “உன் பெண்ணுக்கு ஆறுதல் பரிசாவது கிடைக்குமா?” என்று கேட்டார். உடனே என் அம்மா “மதர் மனசு வைத்தால் நிச்சயம் கிடைக்கும்” என்று பதில் சொல்லி முடித்தாரோ இல்லையோ, டி.வி.யில் “இதில் ஆறுதல் பரிசு பெறுபவர் த. அபர்ணா” என்று சொல்லி எங்கள் வீட்டு விலாசத்தை சொல்லவும் நான் மகிழ்ந்து போக, என் அம்மாவோ “நான் சொன்னேன் பார்த்தீர்களா அன்னையின் மகிமையை” என்ற பாவனையில் என் அப்பாவைப் பார்க்க, அவர் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போய்விட்டார்.”

“என்னம்மா ஒன்றுக்கு மேல் ஒன்று சுவாரஸ்யமாக இருக்கிறது அடுத்தது என்ன?'' என்று ஆரம்பிப்பதற்குள் சுகுணா தன் அனுபவத்தை விவரிக்க ஆரம்பித்தாள்.

“இரண்டு மாதம் முன்பு திடீரென்று என் தந்தைக்கு பணமுடை ஏற்பட்டது. அவசரமாக ஒரு ஐந்நூறு ரூபாய் தேவையாயிருந்தது. மாதக்கடைசி. யாரிடமும் கடன் கேட்கவும் விருப்பமில்லை.

“அன்னையே எனக்கு எப்படியாவது ஒரு ஐந்நூறு ரூபாய் தேவையாக இருக்கிறது. நீங்கள்தான் கை கொடுத்துக் காப்பாற்ற வேண்டும் என்று அந்த ஞாபகம் வரும்போதெல்லாம் சமாதியில் நாகலிங்கப்பூ வைத்துப் பிரார்த்திப்பதாகக் கற்பனை செய்து கொண்டார். மறுநாள் காலையில் அவரது சக ஊழியர் வந்து, சார் உங்களுக்குத் தெரியுமா? நமக்கு பண்டிகைக்காலக் கடன் (**festival advance**) 2000 ரூபாயிலிருந்து 2500 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். ஏற்கனவே 2000 வாங்கியவர்கள் அந்த அதிகப்படியான 500 ரூபாயை கையெழுத்துப் போட்டு வாங்கிக் கொள்ளலாம்,” என்றார். உடனே அன்னைக்கு நன்றியைத் தெரிவித்த அப்பா, “எதையும் மனிதர்களைக் கேட்காமல் அன்னையைக் கேட்கவேண்டும்” என்று

புத்தகத்தில் படித்திருக்கிறேன். அது எவ்வளவு பெரிய உண்மை? என்று வியந்தபடி பணத்தை வாங்கி வந்தார்.''

கந்தன் இந்த முறை எதுவும் சொல்லாமல் ஏதோ யோசித்தவாறு அழுக்குப்படிந்த தன் துண்டின் ஒரு மூலையில் இருந்த ஒரு முடிச்சை அவிழ்த்து அதிலிருந்து எட்டாக மடிக்கப்பட்ட ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து "நீங்களெல்லாம் சொல்வதைப் பார்த்தால் எல்லோரும் அம்மாவுக்கு ஆயிரம், ஐந்நூறு என்று காணிக்கை கொடுப்பீர்கள் போலத் தெரிகிறது. நானோ பரம ஏழை. என்னிடம் தற்சமயம் இருப்பது இந்த பத்து ரூபாய் மட்டுமே, தயவு செய்து இதை என் சார்பில் அம்மாவிடம் சேர்த்து விடுகிறீர்களா?'' என்று பணிவாகக் கேட்டான். "ஆஹா அதற்கென்ன'' என்று அதை வாங்கிக் கொள்வதற்கும் ஸ்டேஷன் வருவதற்கும் சரியாக இருந்தது. கந்தன் அவர்களிடமிருந்து பிரியா விடை பெற்றுக்கொண்டு ரயிலி லிருந்து இறங்கி தன் கிராமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

போகும் வழியில் அம்மாவைப்பற்றிய இனிய நினைவுகளை அசை போட்டுக் கொண்டே வந்தான். தன் குடிசையை நெருங்கும்போதுதான் வீட்டுக்கவலை தலைதூக்கத் தொடங்கியது. வீட்டில் வேலாயி என்னை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாளே. வரும்போது ஒரு ஆழாக்கு அரிசி, வெங்காயம், பச்சைமிளகாய் எல்லாம் வாங்கி வா மச்சான், தினமும் கஞ்சி குடிச்சு நாக்கு செத்துப் போச்சு. ஒரு நாளாவது அரிசி சோறு சாப்பிடலாம் என்றாளே. இருக்கிற பத்து ரூபாயையும் கொடுத்து விட்டேனே. அய்யோ அப்படியெல்லாம் நினைக்கக்கூடாது. தப்பு, அம்மா தப்பு. எல்லோருக்கும் வழி காட்டும் நீ எனக்கும் ஒரு வழி காட்ட மாட்டாயா என்ன என்று எண்ணியவாறு குடிசையை அடைந்தான்.

"வா மச்சான் வா'' முல்லைப்பல் வரிசைதெரிய தலை நிறைய மல்லிப்பூவுடன் அவனை வரவேற்றாள்.

"என்ன புள்ளே இது? தலையிலே அதிசயமா பூ வெச்சிருக்கே. கஞ்சிக்கே வழியைக் காணோம். பூ வாங்க உனக்குப் பணம் ஏது?''



"இனிமே நமக்கு நல்ல காலம்தான். உங்க சித்தப்பா வந்திருந்தாரு. நம்ம பங்காளி மேல் நில விஷயமா "கேஸ்'' போட்டிருந்தோமில்ல அது ஜெயிச்சிட்டதாம். அவர் வரும்போது பூ, பழம் வாங்கிட்டு கூடவே நூறு ரூபாய் தட்டுல வெச்சுக் கொடுத்து ஆசீர்வாதம் பண்ணினாரு.

அந்தப் பணத்தில அரிசியெல்லாம் வாங்கி உனக்கு விருந்து பண்ணி வெச்சிருக்கேன். நீ ரொம்ப களைப்பா இருக்கே. கை கால் கழுவிக்கிட்டு வந்து சூடா சாப்பிடு''.

கந்தனுக்குக் காரணம் புரிய நேரமாகவில்லை. அம்மா தன் மீதும் கருணையை வர்ஷிக்க ஆரம்பித்துவிட்டார் என்று புரிந்து கொண்டான். சாப்பிடும்பொழுது அன்று நடந்த நிகழ்ச்சியை ஒன்று விடாமல் சொல்லிக் கொண்டே வந்தான். கேட்ட வேலாயி ஆச்சரியப்பட்டாள்.

"வேலாயி அந்தப் புள்ளைங்க என்கிட்ட எவ்வளவு மரியாதையா பேசினாங்க தெரியுமா? அவங்க பேசினதையெல்லாம் கேட்டதிலி ருந்து எனக்கு ஒரு ஆசை. எப்படியாவது என் ஆயுசு முடியறதுக் குள்ளே ஒரு நடையாவது அவங்களைப் பார்த்திட்டு ஆசீர்வாதம் வாங்கிட்டு வரணும் என்று இப்போ அதுக்கு வழி ஏற்பட்டுவிட்ட மாதிரி தெரிகிறது.'' "எப்படி?''

"கையகல புன்செய் நிலத்தில் வேர்க்கடலை விளைஞ்சு அதை சந்தையில வித்துட்டு கைக்கும் வாய்க்குமாய் போராடிக்கிட்டிருந் தோம். இப்போ மூணு போகம் விளையும் நஞ்சை நிலம் பெரிய அளவில கிடைக்கிறது. அதில் நல்லா ஒழைச்சு முதல்ல வர்ற மகசூலைக் காசாக்கி எடுத்துக்கிட்டுப்போய் அம்மாவுக்குக் காணிக்கையா செலுத்தணும் என்கிற ஆசை வந்திட்டுது.'' "ஏதேது கற்பனைக் கோட்டை கட்டிக்கிட்டுப் போறே?'' "கற்பனையில்லை புள்ளே, அம்மா மனசு வெச்சா என்னதான் நடக்காது?''

இதற்கிடையில் பாண்டியை அடைந்த அந்த ஐந்து பெண்களும் அன்னையின் தரிசனத்திற்காக உத்தரவு வாங்கிக் கொண்டு சென்றனர். கியூவில் நின்றவர்கள் தங்களுடைய முறை

வந்தபொழுது அன்னையை நமஸ்கரித்துவிட்டுத் தாங்கள் கொண்டு வந்திருந்த காணிக்கையைச் சமர்ப்பித்தனர். அன்னை அவர்கள் தலையில் கைவைத்து ஆசீர்வதித்தார். பிறகு மெல்லிய குரலில் "எல்லா காணிக்கையும் செலுத்தியாகிவிட்டதா?" என்று கேட்டார். "ஆமாம்" என்று தலையாட்டிய தாரிணி சட்டென்று நினைவுக்கு வந்தவளாக ரயிலில் தாங்கள் சந்தித்த கந்தனைப்பற்றிக் கூறி அவன் கொடுத்த பழைய கசங்கிய பத்து ரூபாய்த்தாளை தயங்கியவாறே எடுத்து அன்னையின் காலடியில் சமர்ப்பிக்கப் போனாள். சட்டென்று அன்னை அவள் கையைத் தடுத்து அவள் கொடுத்த அந்த பத்து ரூபாயை ஆர்வமுடன் வாங்கி "இந்தக் காணிக்கைக்கு ஈடு இணை கிடையாது. இந்த நன்றிக் கடனை தீர்க்கவே முடியாது" என்று நெகிழ்ச்சியுடன் கூறினார். தாரிணியும் அவள் தோழிகளும் அசந்து போயினர்.

தரிசனம் முடிந்து வெளியே வந்ததும் விமலா, "தாரிணி எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நாம் எத்தனையோ பேரிடமிருந்து பெரிய தொகைகளைக் காணிக்கையாகக் கொண்டு வந்து செலுத்தினோம். ஆனால் அம்மாவோ கந்தனிடமிருந்து வந்த பத்து ரூபாய்க்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது ஆச்சரியமாக இருக்கிறது. கந்தன் மிகவும் கொடுத்து வைத்தவர்" என்றாள்.

"கந்தன் கொடுத்து வைத்தவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர் கொடுத்த காணிக்கைக்கு அம்மா முக்கியத்துவம் கொடுத்தது எனக்கு ஆச்சரியமாகவே இல்லை. ஏனென்றால் லட்சக்கணக்கில் பணம் இருப்பவர்கள் அதிலிருந்து ஒரு ஆயிரம் ரூபாய் கொடுப்பது ஒன்றும் பெரிய விஷயமில்லை. அந்த ஏழை விவசாயி அடுத்த வேளை சோற்றுக்கே கஷ்டப்படுபவன் தன்னிடமிருந்த ஒரே சொத்தான பத்து ரூபாயை மனமுவந்து கொடுப்பது பெரிய விஷயமில்லையா?" என்று விளக்கம் கொடுத்தாள் தாரிணி. "தாரிணி நீ எவ்வளவு அழகாக விளக்கி விட்டாய்?" என்று அவளைப் பாராட்டினாள்.

தொடரும்.



"Conversation"

# பிரார்த்தனை பலிக்க வேண்டும்

தம்பி - அப்படியானால் சட்டம் எது? நம் நிலைக்கு 10 மடங்கு, 100 மடங்கு உயர்ந்த வாய்ப்பை அன்னை அளிக்கிறார். எந்தச் சட்டத்தை எப்படிப் பின்பற்றினால், அது கூடி வரும்.

அண்ணன் - முதல் காரியம் நமக்கு நல்லது வருகிறது என்றால், நம்மவர் அனைவரும் (4 பேரானாலும், 10 ரூபாயானாலும்) அதை உளமார வரவேற்க வேண்டும். அந்த முதல் நிபந்தனையே எங்கேயும் பூர்த்தியாவதில்லை.

தம்பி - அது தெரிந்த விஷயம், மனைவிக்கு **T.V.**இல் பேச்சுவந்தால் கணவனுக்குப் பொறுக்கவில்லை. கணவனுக்குத் தொழில் பெருகினால் மனைவி, "இவர் கையில் பணம் வரக் கூடாது. வந்தால் என்னைக் குப்பையில் போட்டுவிடுவார்". அண்ணனுக்கு வந்தால் தம்பிக்கு ஆகாது, தம்பிக்கு வர அண்ணன் சம்மதிக்க மாட்டான். அதைக் கடந்துவந்தால்,

அண்ணன் - நமக்குத் தெரிந்தவர்களில், அதைக் கடந்தவருண்டா? ஒருவர் கூட இல்லையே.

தம்பி - இருக்கட்டும் சட்டம் வரை சொல்லுங்கள்.

அண்ணன் - வேலை செய்யச் சுணங்குபவர் விலக்கு, நன்றிகெட்டவர் விலக்கு. இப்படிப் பார்த்தால் யார் தேறுவார்? இது அன்னைமூலம் வருகிறது என்று தெரிய முடியாமல் தூரத்திலிருப்பவர் தம் திறமையால் வருகிறது என்று நினைத்தால், அவர்கட்குப் பலித்து விடுகிறது. 20 வருஷத்தில் தொழில் 1500 கோடியாயிற்றே அவருக்கு, தாம் செய்த சேவை தெரியுமா?

தம்பி - அந்தச் சேவையை ரத்து செய்ய 4 வருஷமா முயல்கிறாரே! இவர் தூர இருப்பவர். திறமைசாலி. இவர் நிறுவனம் சேவை செய்வது. இவருக்குச் சரிவரத் தெரியாது. சேவை பலனைக் கொடுக்கிறது. இதெல்லாம் அன்னையால் நடக்கிறது என்று தெரிந்தால்தானே மனம் வேலை செய்யும். மனம் வேலை செய்தால் காரியம் கெடும்.

அண்ணன் - அப்படியொருவரிருந்தால், அவர் செய்யக்கூடிய முதற்காரியம் ஒன்று 100 ஆகப் பெருகுவதை, சோதனை செய்ய வேண்டும்.

தம்பி - சோதனையே வேண்டாம். நம்புகிறவர்க்கு சொல்லுங்கள்.

அண்ணன் - சொல்கிறேன். சோதனை என்றால் ஒரு முறை செய்யலாம். அத்தோடு நிறுத்த வேண்டும். செட்டியார் கம்பனியில் சேல்ஸ் ஆபீசரை எடுத்துக்கொள்வோம். இவர் கம்பெனி 4 கோடி கம்பனி. பல ஆபீசர்கள் இருக்கிறார்கள். அந்தச் சேலத்து ஆபீசர் மாதம் 20 லட்சம் விற்கிறார். செட்டியார் இவரிடம் சோதனை செய்தால், கம்பனி, 5 **components, organisation, energy, results** ஆகிய அனைத்தையும் புரிந்து கொண்டு மனதால் இந்த சக்தியை நம்ப வேண்டும். நமது விதிப்படி எல்லா முறைகளையும் சரிவரப் பின்பற்றினால் ஒன்று நூறாகும் என்பதை இவர் அறிவால் புரிந்து, உணர்வால் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தம்பி - செட்டியாரிடம் சொன்னால் செய்வார்?

அண்ணன் - அதைச் செய்தவுடன் தெம்பு 100 மடங்காவது மனதில் தெரியும். அது பலிக்கும் என்ற அறிகுறி. அதைக் கண்டவுடன் செட்டியார் தனக்கு அதிர்ஷ்டம் வரப்போகிறது. இதைக் கெடுக்கும் காரியம் எதையும் நான் அனுமதிக்கமாட்டேன் என நாம் முன்பு பேசியது



போல் முடிவு செய்ய வேண்டும். அதுவே முதல் நிபந்தனை. பணம் சம்பாதித்தவர்களுக்கு அதை விபரமாகச் சொல்லத் தேவையில்லை. அவர்கட்கெல்லாம் தெரியும். புதியவர்கட்குச் சுருக்கமாகச் சொன்னால் "இந்த அறிகுறியை மனதில் கண்ட பிறகு இதுவரை உங்களுக்கு ஒத்துவராது, ஆகாது என்ற மனிதர்களையும், செயல்களையும் அறவே புறக்கணிக்க வேண்டும்" என்பது போதும். இந்த நிபந்தனையிலும் யாரும் கண்டிப்பாக இருக்கமாட்டார்கள். தூரத்து உறவு கருமாதிக்கு எப்படிப் போகாமலிருப்பது, எதிர்வீட்டு **birthday**க்கு போனால் தப்பா? 10 முறை வாங்கிய கைமாத்தைத் தராத மனிதனுக்கு 11வது முறை எப்படியில்லை என்பது எனப் பல பெரிய, சிறிய தவறுகளைச் செய்து விடுவார்கள்.

தம்பி - செட்டியார் அதைச் செய்யவில்லை என்று கொள்வோம்.

அண்ணன் - 20 லட்சம் நபருக்கு விற்பவரை எடுத்து நம் **consultancy** முறைப்படி எல்லா புது முறைகளையும் **perfect** ஆக சொல்லித்தந்து அவர் 1 மாதத்தில் என்ன விற்கிறார் எனப் பார்ப்பதே சோதனை.

- மனம் பெற்ற புதுத் தெம்பை விட்டுவிடக் கூடாது.
- சேல்ஸ் டிரெயினிங்கில் குறை வைக்கக் கூடாது.
- சூட்சுமத்தில் எதிரான காரியங்களை அனுமதிக்கக் கூடாது. மனதால் அவருடைய சேல்ஸை அன்னையால் நிரப்பியபடி இருக்க வேண்டும்.

தம்பி - பலன் தெரியுமா?

அண்ணன் - சுமார் 10 முதல் 100 மடங்குவரை சேல்ஸ் உயரும். இந்த ஒரு சேல்ஸ் ஆபீசர் 2 கோடி விற்பார், 20 கோடியும் விற்பார். சந்தேகமில்லை.

தம்பி – இது பலமுறை நடந்திருக்கிறது. முதலாளிகள் அதைச் சௌகரியமாக எடுத்துக்கொள்கிறார்களே தவிர, அருள் எனப் புரிந்து கொள்வதில்லை. 1 மாதத்திற்குப் பின் இது தொடராது. சோதனையால் சக்தி விளங்கியபின் முறையாக, கம்பனி முழுவதும் இம்முறையைப் பின்பற்ற முன்வரவேண்டும்.

அண்ணன் – குடும்பத்திற்கும் இதுவே சட்டம். எவரும் செய்வதில்லை. இந்த நிதானம் இருப்பதில்லை. ஏன் நாம் செய்யக் கூடாது?

தம்பி – நாம் செய்ய நம் வீடு அனுமதிக்காது.

அண்ணன் – வீட்டுக்கு வீடு அதுதான் நிலைமை. அதை மீறியும் ஒன்று செய்யலாம். வீட்டிலுள்ளவர் அறியாமல் ஒரு வேலை செய்தால் அது பலிக்கும்.

தம்பி – அந்தப் பலன் வீட்டுக்கு வராது.

அண்ணன் – வீட்டிற்கு நிச்சயம் வராது. சேவைக்கு உதவும். அது போன்ற மனிதரை இதுவரை நான் கண்டதில்லை. ஆனால் முயற்சியை இன்றுவரை கைவிடவில்லை. அன்னை தெளிவாகச் சொல்கிறார் “நல்ல மனம் வேண்டும்” என்று. அது இருப்பது கடினம். அது உள்ளவர் அது இல்லாதவர் மீது பிரியம் கொண்டால் விஷயம் பலிக்காது. நல்ல மனமுள்ளவர் இது கெட்ட எண்ணமுள்ள வருக்காகப் பலிக்க ஆசைப்படுவதால் நடப்பதில்லை.

தொடரும்.

**Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.**

**Editor: Karmayogi**

# சாவித்திரி

எப்பொழுதும் ‘‘சாவித்திரி’ யைப் பிரித்து கேள்வி கேட்கும் பழக்கமுள்ளவர்களுண்டு. பதில் **sanction** ஆக வந்தால் செய்பவர்கள் ஒரு சாரார். இல்லை என்று வந்தால் அந்த வேலையை மீண்டும் செய்பவரும் உண்டு. கேட்டால், “சாவித்திரி’ சொல்வதுபோல் நடக்க மனமில்லாதவர் கேட்காமலிருப்பது நல்லது. கல்லூரிப்படிப்பை விட்டு அறிவு வளர படிப்பதை நினைத்தவர் சாவித்திரியைக் கேட்டால், விட்டுவிடு என வந்தால் எத்தனை பேர் கல்லூரிப்படிப்பை விட முடியும்?

அப்படிப்பட்ட பக்தர் ஒருவருக்கு ஒரு சந்தோஷமான பிரச்சினை. மனம் சந்தோஷத்தால் பொங்கி வழிகிறது. ஆனால் அவர் மனதில் தோன்றும் காரியத்தை உலகம் ஏற்காது. பணக்காரக் கூட்டாளியை அவர் பக்தரில்லை என்பதால் விலக்கி, பணமில்லாத பக்தரைக் கூட்டாளியாகச் சேர்ப்பதை உலகம் ஏற்காது. சாவித்திரியைக் கேட்க நினைத்தார்.

**...time divine, action wonderful**

என்ற வரி புத்தகத்தைப் பிரித்தவுடன் கண்ணில் பட்டது. சாவித்திரி காட்டிய வழிப்படியே நடந்தார். பணமில்லாத கூட்டாளி ஜீவனில்லாமல் செயல்பட்டார். ஆனால் மனம் மேலும் துள்ளியது. மேலும் பலமுறை சாவித்திரியைக் கேட்க நினைத்தார். அப்படிச் செய்யக் கூடாது என நினைத்தார். எது சொன்னாலும், சாவித்திரி சொற்படி நடப்பதாக முடிவுசெய்தார். மீண்டும் கேட்டார். பணமில்லாக் கூட்டாளியின் பக்திக்கு நீ உரியவனில்லை. அவனுடைய பக்திக்குரிய அளவில் நீ உயர்ந்தால் உனக்காக ஓர் **Marvel** அற்புதம் காத்திருக்கிறது என்று சாவித்திரி வழி காட்டியது. மனம் ஏற்றுக் கொண்டது. உணர்வு ஏற்க மறுத்தது. கூட்டாளி ‘‘நீ குறையுடையவன்’’ என்று வற்புறுத்திக் கூற ஆரம்பித்தான். இதுவே தான் தேடிய அருள் என அறிவு கூறினாலும் மனம் கசங்குகிறது.

**அருளை விரும்பி ஏற்பது பக்தனுக்குரிய பாங்கு**

# வெயிலும் குளிரும்

நம்பிக்கை அறவேயில்லாத பலர் அன்னையுடன் நெருக்கமாக இருந்தனர். புதிய பக்தர்களுடன் அவர்கள் பேசி அவர்கள் அனுபவத்தைக் கேட்டால் நம்பிக்கையில்லாமல் சிரிப்பார்கள். அன்னையின் ஸ்பர்சம் நம்பிக்கையைப் பொருத்தது. நெருக்கத்தைப் பொருத்ததில்லை. படிக்காதவன் நூலகத்தில் வேலை செய்தால் அவனுக்குப் பலனில்லை.

ஐரோப்பாவில் குளிரான நாட்டிலிருந்து புதுவை வந்து அன்னைக்குரிய நிலத்தில் அக்னி நட்சத்திரத்தில் ஒருவர் வேலை செய்தார். வெயில் தாங்காமல் நாமெல்லாம் ஓடும்பொழுது, அவரை வெயில் பாதிக்கவில்லை. அவர் நண்பர் எப்படி இது என்று கேட்டார். “நான் காலையில் எழுந்தவுடன் இன்றைய வெயில் என்னைப் பாதிக்கக்கூடாது என்று அன்னையிடம் கூறினால் அன்று பொதுவாக வானம் மந்தாரமாகவும், குளிர் காற்று வீசியபடியுமிருக்கும். கடும் வெயிலானாலும் நான் அதனால் பாதிக்கப்படுவதில்லை” என்றார். உடனிருந்த சாதகர்கள் அவரை நம்பவில்லை.

மே மாதம் வயதான அமெரிக்கத் தம்பதிகள் புதுவை வருகிறார்கள். **A/C** ரூமில் தங்குகிறார்கள். தினமும் பல மணி வேலையுள்ள வீட்டில் **fan** கூட இல்லை. வீட்டில் அனைவரும் கவலைப்பட்டார்கள். முக்கியமானவர் மட்டும் கவலைப்படவில்லை. விமான நிலையத்திலிருந்து அவர்கள் புதுவை வரும்வரை வானம் இருண்டு, காற்று குளிர்ந்தது. வேலைக்காக வந்த வீட்டில் பல மணியிருந்த பொழுது எவரும் வெய்யிலை உணரவில்லை*!*

டிசம்பர் ஐரோப்பாவில் குளிர் மாதம். குளிர் அதிகம். வழக்கமாக அங்கேயிருப்பவர்கள் கோட்டு, ஓவர் கோட்டு, சுவெட்டர் என அணிந்து கொண்டனர். இந்தியப் பெண் அங்கிருக்கும்படி அமைந்தது. எல்லா **warm clothes** எடுத்துப்போயிருந்தாள். காலையில் அன்னையிடம் குளிரைப்பற்றிச் சொன்னாள். அவளுக்கு குளிர் தெரியவில்லை. கோட்டையும், ஓவர் கோட்டையும் போட்டுக்கொள்ளவில்லை. சுவெட்டர் மட்டும் போட்டுக்கொண்டாள். அங்குள்ளவர்களே ஆச்சரியப்பட்டார்கள்.

**குளிரும் வெயிலும் அன்னைக்குக் கட்டுப்படும்.**
**நம் மனம் அன்னையை அதுபோல் ஏற்றுக்கொள்ளுமா?**